தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 60　　　　**மலர் : 9**

உள்ளுறை

1. கல்லணையைக் கட்டியது யார்? 385

டாக்டர் க. த திருநாவுக்கரசு,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை 600 113.

2. வட்டாரவியல் தத்துவம் பற்றிய ஓர் அறிமுகம் 400

மு. அ. முகமதுஉசேன், எம். ஏ.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி,
கும்பகோணம்.

3. கதையாசிரியர்களும் உத்திகளும் 413

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் இரா. சண்முகவேலன்,
தமிழ்த்துறை,
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி,
பூண்டி.

4. நடுகற் குறிகளும் சுடுமட் கலங்களும் 417

க குழந்தைவேலன்
கல்வெட்டாய்வாளர்

5. தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை ... 425

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2017

துணர் : 60 அட்சய — மார்கழி மலர் : 9

டிசம்பர் — ஜனவரி 1986—1987

கல்லணையைக் கட்டியது யார்?

திருக்குறள்மணி
டாக்டர் க. த. திருநாவுக்கரசு,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை 600 113.

'கரிகாலன் கட்டிவைத்தான் கல்லணை' எனும் பாடல். இக்காலத்தில் நாட்டு மக்களுடைய நாவில் எல்லாம் நடமாடுகிறது. இந்தப் பாடலில் குறிப்பிடப்படும் 'கல்லணை'யைப் பற்றிய வரலாற்று ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

திருச்சி மாவட்டத்தில் திருவரங்கத்திற்குக் கிழக்கே, தஞ்சைக்குச் சற்று வடமேற்கே 8 கி. மீ. தொலைவில் 'கோவிலடி' எனும் ஊருக்கு அருகில், காவிரியின் குறுக்கே கல்லணை கட்டப் பட்டுள்ளது. இதைத்தான், நம்நாட்டு மக்கள் 'கல்லணை', 'பேரணை' எனும் பெயர்களால் சுட்டி வருகின்றனர். இந்த அணைக்கட்டையே, ஆங்கிலேயர் 'கிராண்ட் அணைக்கட்டு' (Grand Anaikkatt) எனவும், 'பெரிய அணை' (The Great Dam) எனவும் போற்றினர்.

சுதந்திர இந்தியாவில், பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களின் எல்லைப் பகுதியில் 'பாக்ரா நங்கல்' எனும் மாபெரும் அணைக்கட்டு எழுப்பப்படுவதற்குக் காலத்தால் ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தியாவின் சிறப்புமிக்க பேரணையாகக் கல்லணையைக் குறிப்பிடலாம்.

1930 அளவில் காவிரி ஆற்றின் வெள்ளப் பெருக்கு வீணாகப் போகாமல் காக்க விரும்பிய கருநாடகத்தின் தவப்புதல்வனும், இந்திய மூதறிஞருமான டாக்டர் விசுவேசரய்யா, மைசூர் மாநிலத்தில் கண்ணம்பாடி அணைக்கட்டை அமைத்தார். ஏறக்குறைய அதே காலகட்டத்தில் காவிரியில் சேலத்துக்கு அருகில், 'மேட்டூர்' எனும் இடத்தில், தமிழறிஞரும் பொறியியல் வல்லுநருமான பா. வே. மாணிக்க நாயகரின் பெருமுயற்சியால், 'மேட்டூர் அணை' எழுப்பப்பட்டது. இவ்வணைகளுக்கு எல்லாம் காலத்தால் முற்பட்டதும், பழமையானதுமாக விளங்குவது 'கல்லணை'.

சென்ற நூற்றாண்டில், கல்லணையைக் கண்ட ஐரோப்பிய ஆட்சியாளர்களும், பொறியியல் வல்லுநர்களும், "திராவிடர் (தமிழர்) கள் விண்ணை முட்டும் மாபெரும் கோயில்களைக் கட்டு வதில் மட்டும் வல்லவர்கள் அல்லர். மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவுப் பொருள்களை விளைவிப் பதற்குப் பயன்படும் பாசனப் பணிகளுக்கு உதவும் ஆழமும், திண்மையும் வாய்ந்த நீர்த்தேக்கங்களை, ஆறுகளின் இடையே அணைகளாகக் கட்டி உருவாக்கியுள்ளனர். சென்னை மாகாணத் தில், திருச்சி-தென்னார்க்காடு மாவட்ட எல்லைகளுக்கு இடையில் உள்ள கல்லணை, காலத்தால் அழிவுறாது நல்ல நிலையில் உள்ள பேரணையாகும்.

அதன் திட்டமிட்ட அமைப்பும், கருங்கற்களால் நிறுவப் பட்டுள்ள உறுதிவாய்ந்த கட்டுமானமும் அதை அமைத்த

காலத்திய மக்களின் பொறியியல் தொழில்நுட்ப மேம்பாட்டை உலகிற்கு எடுத்துரைக்கின்றன''[1] என்று வியப்புடன் போற்றியுள்ளனர்.

இத்தகைய சிறப்புமிக்கக் கல்லணையைக் கட்டியது யார்? என்பதே இன்று நம்மிடையே எழும் வினாவாகும்.

கரிகாலனா?

மக்கள் இடையே, 'கரிகாலனே இக் கல்லணையைக் கட்டினான்' எனும் கருத்துப் பரவலாக வழங்கிவருகிறது. சங்க காலத்தில் இருபெரும் சோழ வேந்தர்கள், 'கரிகாலன்' எனும் பெயரோடு விளங்கினர். தமிழக வரலாற்றின் 'விடிவெள்ளி'யாக விளங்கிவரும் கரிகாலன், நாம் அறிந்த முதல் சோழப் பெரு வேந்தனாவான். இவன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அரசனாவான்; வெண்ணிப் பறந்தலைப் போரில் வெற்றி பெற்ற மாவீரனாவான். இவனுக்குப் பிறகு அரை நூற்றாண்டு கழித்து, 'திருமாவளவன்' எனும் பெயருடைய அரசன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். இவனுக்கும் கரிகால்வளவன் எனும் பெயர் வழங்கியதாகத் தெரிகிறது. இவனை இரண்டாவது கரிகாலன் (கரிகாலன்-II) என்று வரலாற்று அறிஞர்கள் சுட்டுவர்.[2]

திருமாவளவன் உள்நாட்டுத் தலைநகரான உறையூரில் இருந்து, கடற்கரைப் பட்டினமான காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தன்னுடைய கோநகரை மாற்றிக்கொண்டான்.

இந்தக் கரிகாலர் இருவருக்கும் தனித்தனியே உரிய சிறப்புகளை, ஒருவனுக்கேயுரியதாக்கி, 'கரிகாலன் ஒருவனே' எனக் கருதும் மரபு, எவ்வாறோ பண்டைத் தமிழ் நாட்டிலேயே தோன்றி விட்டது.

கரிகாலன் எனும் பண்டைக் காலச் சோழ வேந்தன், காவிரியாற்றுக்கு இரு பக்கத்திலும் கரை அமைத்தான் என்பதனைப் பல்வேறு தமிழ் இலக்கியச் சான்றுகளும் சோழப் பெருமன்னன் இராசேந்திரனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடும், ஆந்திர மாநிலத்துத் தெலுங்குச் சோட(ழ)ர்களின் செப்பேடுகளும் கல்வெட்டுகளும் தெரிவிக்கின்றன.

---

1. Trichy District Gazetteer, pp. 1 8-30.
2. முதலாம் இராசராச சோழன், ப. 15.

காவிரிக்குப் 'பொன்னி' என்பது ஒரு காரணப் பெயராகும். 'கலிங்கத்துப் பரணி' எனும் முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திய (கி. பி. 1070 - 1120) தமிழ் இலக்கியம், கரிகாலன் காவிரிக்குக் கரை கண்டதைப் புகழ்ந்து பாடுகிறது.

"தொழுது மன்னரே **கரைசெய்** பொன்னியில்
தொடர வந்திலா முகரியைப் படத்து
எழுது கென்றுகண் டிதுமிகைக்கண் என்று
இங்க ழிக்கவே ஆங்க ழிந்ததும்"

(கலிங், பரணி. இராச. 20)

இதே செய்தியைக் கவிராட்சசரான ஒட்டக்கூத்தர்,

"சென்னிப் புலியேறு இருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் **கரைகண்ட** பூபதியும்

(மூவரு. 1 : 18)

எனவும்,

"... ... ... தலையேறு
மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாள்(ன்?)
கண்கொண்ட சென்னிக் கரிகாலன்"

(மூவரு. 2 : 18)

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றால் தெரியவருவது கரிகாலன் எனும் சோழ அரசன், காவிரிக்குக் கரை அமைத்தான் — கட்டினான் என்பதேயாகும்.

இதே கருத்தைச் 'சோழ மண்டல சதகத்'துள் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்று,

"தொக்க கலியின் மூவாயிரத்துத் தொண்ணூற்றில்.
மிக்க கரிகால் வேந்தனுந்தான் — பக்கம்
அலைக்கும் புகழ்ப் பொன்னி யாறுகரை கண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து"

(பெருந்தொகை. 778)

எனப் பேசுகிறது.

சென்னை அரசினர் கையெழுத்துச் சுவடி நூலகத்தில் உள்ள சோழ மண்டல சதகத்தில்

"அஞ்சின் முடிகவித்து ; ஐம்பத்து மூன்றளவில்
கஞ்சிகா வேரிக் கரைகண்டு-தஞ்சையிலே
எண்பத்து மூன்றளவு மீண்ட இருந்தேதான்
விண்புக்கான் தண்புகார் வேந்து"[3]

என்னும் பாடல் காணப்படுகிறது. இந்தப் பாடலில், காவிரிக்குக் கரைகண்டமையும், காஞ்சி மாநகரை நிறுவியமையும் குறிப்பிடப் பட்டுள்ளன: மற்றவை எல்லாம் பிற்காலச் சோழ மன்னருக்கு உரியன. சங்க கால வேந்தர்கள் காலத்தில் தஞ்சை மாநகரம் உருவாக்கப்படவில்லை. எனவே, இப்பழம்பாடல் சொல்லும் இச்செய்தி மிகவும் பிற்பட்ட காலத்தியதாகும்.

இவ்விலக்கியச் சான்றுகளால், ஓர் உண்மை மட்டும் நெடுங் காலமாகத் தமிழ் மக்களால் பசுமையான நினைவோடு போற்றப் பட்டுவருவது புலனாகிறது. கரிகாலன் எனும் சோழப் பேரரசன், காவிரிக்குக் கரைகளைக் கட்டினான் என்பதே அவ்வுண்மையாகும்

தெலுங்குச் சோழர்களுடைய (கி. பி. 5 நூ. முதல் 7 நூ. வரை) செப்பேடுகளில்,கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த செய்தியோடு வேறொரு கதையும் (மூவருலா, கலிங்கத்துப்பரணியில் உள்ளதைப் போல) சேர்த்துப் பேசப்படுகிறது.

"சரண ஸரோருஷ விஹத விலோசன
காரித காவேரி தீர கரிகாலஹ"[4]

எனும் வாசகம், நம் கருத்தைக் கவருவதாகும். இவ்வடிகளுக்குத் "தன் திருவடித் தாமரைகளில் அழிக்கப்பட்ட சிறப்பாக (நெற்றியில்) மூன்றாவது கண்ணினைக் கொண்டு இருந்த திரிலோசன (முக்கண்ணன்) னன் முதலிய அரசர்களால் கட்டப்பட்ட காவிரிக் கரையுடைய கரிகாலன்" என்பது பொருளாகும்.

இங்குச் சுட்டப்படும் கதைக் குறிப்பு : கரிகாலனால் 'நெற்றிக் கண்' அழிக்கப்பட்டவன் 'முகரி' எனப்படும் வடநாட்டு 'மௌகாரி' அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று திரு. ஆராவமுதன் குறிப்பிட்டுள்ளார்.[5]

---

3. இராகவையங்கார், இலக்கிய சாஸன வழக்காறுகள், ப. 26.
4. Epi Ind. Vol XI No. 35, 11. 3-5.
5. T. G. Aravamuthan, The Kaveri Maukhari and the Sangam Age, P. 18.

ஆனால், ஆந்திரநாட்டில் கிடைத்துள்ள கல்வெட்டுகள், திரிசலோசன பல்லவனே, கரிகாலனால் கண் அழிக்கப்பட்டவன் என்று தெரிவிக்கின்றன.[6] அவனுக்கு 'முக்கண்டிக் காடுவெட்டி' 'என்னும் மற்றொரு பெயர் வழங்கியதாகவும் தெரிகிறது இக் கதைகள் பிற்காலத்தில், 'கரிகாலனைப் பற்றிய தொன்மங்களாக'த் (Myths) தோன்றியவை என அறிஞர் கருதுகின்றனர். இவ்வாறு கருதுவதற்குரிய காரணங்களுள் முக்கியமானது கால வரன் முறையாகும்.

'திரிலோசன பல்லவன்' என்பவன் மேலைச் சாளுக்கிய அரசனான முதலாம் புலிகேசிக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த விஜயாதித்தன் என்பவனால் தோற்கடிக்கப்பட்டவனாகத் தெரிகிறது. முதலாம் புலிகேசிக்குப் பின்வந்த விஜயாதித்தன் கி. பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவனாவான். எனவே சங்க காலத்திய கரிகாலன் (கி. பி. இரண்டாம் நூ. ஆ) முகரியை (திரிசலோசனனை)க் கண் அழித்து இருக்க இயலாது என்பது அறிஞரின் துணிவாகும்.[7]

தெலுங்குச் சோடனான புண்ணிய குமாரனுடைய மேலப்பாடு செப்பேட்டில் கரிகாலன் காவிரிக்குக் கரை அமைத்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் 'முக்கண்' உடைய அரசனைப் பற்றிய குறிப்பு யாதும் இடம்பெறவில்லை.

கி பி. 634-இல், கங்க அரசன் பூவிக்கிரமன் பேதிரூர் செப்பேட்டை வழங்கியுள்ளான். அச்செப்பேட்டிலும் கரிகாலன் காவிரிக்குக் கரைகளைக் கட்டிய செய்தி இடம்பெற்று இருக்கிறது. எனினும் அதனுடன் 'முக்கண்' உடைய அரசனைப் பற்றிய செய்தி இல்லை.

எனவே, கரிகாலனோடு திரிநேத்திரப் பல்லவனை இணைத்துக் கூறும் கதை, மிகவும் பிற்பட்ட காலத்தியதாக இருத்தல் கூடும். இதனை வெறுங்கற்பனைக் கதையாகவே கொள்ளலாம்.

ஏனெனில், "தென்னிந்தியாவில் ஆரிய குலத்தில் தோன்றிய அரச மரபுகளும், குறுநில மன்னரின் குடிகளும் யாதாவது ஒரு வகையில், தங்களுடைய மூதாதையருள் கரிகாலனை ஒருவனாகச்

---

6. Epi. Ind. XI No 35
7. K. A. Nilakanta Sastri, Studies in Chola History and Administration, p. 69.

சேர்த்துக் கூறுவதில் பெருமைப்பட்டுள்ளன. அவை, காவிரியின் இரு பக்கங்களிலும் கரை அமைத்து, வான்புகழ் கொண்டான் கரிகாலன் என்பதை மறவாமல் குறிப்பிடுகின்றன.

ஆந்திர தேசத்துச் சோடர்களும், வாரங்கல்லின் காகதீயர்களும் அல்லாமல் பிற்காலத்தில் கடப்பாவை ஆண்ட மால்தா சிற்றரசர்களும், கார்வேட்டி நகரத்துச் சாருவச் சிற்றரசர்களும் கரிகாலனைத் தத்தம் மூதாதையருள் ஒருவனாக உரிமை கொண்டாடியுள்ளனர். மேலும், விசயநகரப் பேரரசர்களுடன் மணவுறவு கொண்ட சந்திர குலத்தின் வழிவந்த சிற்றரசர், பிரபுக்கள் யாவருமே கரிகாலனைத் தங்கள் மூதாதையாகப் போற்றியுள்ளனர்[8] எனும் கல்வெட்டுக் கலைஞர் எச். கிருஷ்ண சாஸ்திரி அவர்களுடைய கருத்துரை இங்குச் சிந்திக்கத் தக்கதாகும்.

எனவே, கரிகாலனைப் பற்றிப் பழங்கதைகள் பல தோன்றியுள்ளதில் வியப்பிற்கு இடமில்லை.

முதலாம் இராசேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேட்டில், பொன்னியாற்றிற்குக் கரைகண்டவன் கரிகாலன் எனவும், அவன் விசயாலயச் சோழ மரபின் மூதாதை எனவும் ஒரு செய்யுள் தெரிவிக்கிறது. இவற்றுடன், 'கரிகாலன்' என்பதற்குக் கலிகாலந்துக்குக் காலன் (கலியுகத்திற்கு யமன்) எனவும், பகையரசர்களாகிய யானை (கரி)களுக்குப் பகைவன் யமன் (காலன்) எனவும், சிலசெய்யுள்கள் கரிகாலனுடைய பெயருக்குப் புதிய விளக்கங்களையும் தருகின்றன.[9]

மேற்கண்ட இலக்கிய, கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகள் யாவும், சங்க காலத்தில் சிறப்புற்று விளங்கிய கரிகாலன் எனும் சோழ வேந்தன் காவிரிக்குக் கரைகளைக் கட்டினான் எனும் செய்தியையே தெரிவிக்கின்றன.

இவற்றோடு ஸ்ரீலங்காவின் காலவழிச் செய்திக் கோவையான 'இராசாவளி' எனும் நூலில் 'கஜபாகு' (கயவாகு) எனும் செல்லப் பெயருடைய காமணி அபயன் (கி. பி. 112 - 134)[10] சிறு பிள்ளையாக இருந்தபொழுது, கரிகாலன் இலங்கையின்மீது படையெடுத்து வந்தான்; பன்னீராயிரம் சிங்களவரைச் சிறைப் பிடித்துச் சென்றான்; அச்சிங்களவரைக் கொண்டு, காவிரி

8. i. Ind. Vol. XI, p. 340, n. 2.
9. திருவாலங்காட்டுச் செப்பேடு செ. 18-20.
10. எஸ். பரணவிதானாவின் காலக்கணிப்பு.

யாற்றிற்குக் கரை அமைத்தான்''[11] என்று அறிவிக்கும் செய்தியையும் இணைத்துப் பார்ப்போமானால், கரிகாலன் காவிரிக்குக் கரைகட்டிய செய்தி உண்மை நிகழ்ச்சியாகவே தோன்றும்.

இந்நிலையில் 'சங்க காலத்திய கரிகாலர் இருவருள், காவிரி யாற்றிற்குக் கரை அமைத்தவன் யார்?' எனும் ஐயம் எழும். முதலாம் கரிகாலன் ஒரு குறுநில மன்னன்; பையப்பையத் தன்னுடைய ஆதிக்கத்தை இன்றைய திருச்சி, தஞ்சை மாவட்டங் களில் பரப்ப முயன்றவன். இம்முயற்சியில் வெண்ணி முதலிய இடங்களில் பகைவரை எதிர்த்து அவன் போரிட்டுள்ளான்.

ஆனால், அவனுக்குப் பேரனாகவோ, கொள்ளுப் பேரனாகவோ வாழ்ந்த திருமாவளவனாகிய இரண்டாம் கரிகாலனே ஒரு பேரரசை நிறுவியவன்; இலங்கைமீது படையெடுத்துச் சென்றவன். கயவாகுவிற்குக் காலத்தால் முந்தியவன்.[12]

இந்தக் கரிகாலன் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியிலும், இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவனாவான். **இவன் கல்லணையைக் கட்டவில்லை;** காவிரியாற்றின் இருமருங்கிலும் இவன் கரைகளை எழுப்பியுள்ளான் என்பது மேற் கண்ட சான்றுகளால் புலனாகிறது.

கல்லணை கட்டியவன் ஆதித்த கரிகாலனா ?

இராசராஜனுடைய அண்ணன் 'பரகேசரி வீரபாண்டியன் தலை கொண்ட' ஆதித்த கரிகாலனாவான். அவன் கி.பி. 960 முதல் 965 வரை இளவரசனாகச் சிறப்புற்றான். ஆனால், எதிர்பாரா வகையில், கி. பி. 965-இல் பகைவர்களால் அவன் கொலை செய்யப்பட்டான்.

சுந்தர சோழனுடைய மகனாகிய இந்த இரண்டாம் ஆதித்தனுக்கு (ஆதித்தன்-II)ம் 'கரிகாலன்' எனும் சிறப்புப் பெயர் வழங்கியது. இவனைத் தமிழ்நாட்டு வரலாற்றாசிரியர்கள் "மூன்றாம் கரிகாலன்" எனச் சுட்டுவர்.[13] இவனுடைய காலத்தில்

---

11. க. த. திருநாவுக்கரசு இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, பக். 50-51.
12. திருமாவளவனுக்குக் காலத்தால் பிற்பட்டவன் சேரன் செங்குட்டுவன், இச் செங்குட்டுவனும் கயவாகுவும் சிறந்த நண்பர்கள் என்பதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது.
13. வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார், கரிகாலர் மூவர், பக். 80-85.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த கல்லணை கட்டப்பட்டு இருக்குமா? எனும் எண்ணம் எழுகிறது.

இந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவது போன்ற ஒருவகை மயக்கத்தைக் கர்னல் மெக்கன்சி (Col. Mackenzie) யின் கையெழுத்துச் சவடிக் குறிப்பு ஒன்று உண்டாக்குகிறது. அதன் வாசகத்தைக் காண்போம்.

> "கல்லணை கட்டினது பராந்தக சோழ மகாராசாவி னுடைய குமாரன் கரிகால சோழ மகாராச அவர் கட்டினது. அது யெப்போவெனில், கலியுகம் பிறந்து தொளாயிரத்துத் தொண்ணூற்றாம் வருஷத்தில் கரிகாலசோழ மகாராசா பிறந்தது. அவருக்கு 15-ம் அஞ்சாம் வருஷத்தில் பட்டம் கட்டினார்கள். அதன் பிறகு பொன்னியாறு கரைகண்டான். ருயங-ம் அம்பத்து மூன்றாம் ஆண்டு காவேரி கரைகண்டு கல்லணையான (அணை(க்) கட்டை(க்) கட்டினான். இதற்கு, கல்லணைக் கட்டச்சே சொன்ன வெண்பா வும், அந்த கரிகால சோழ கலியுகத்தில் பிறந்து பிரமாணத்துக்கும், அவர் ராச்சிய பாரம் பண்ணின வருஷத்துக்குப் பிரமாணமும் அதுக்கு ஆதரவு, அவர் நாளையிலே சொன்ன வெண்பாவும் எழுதி இருக்கிறது.
>
> "தொக்க (க) லியின் (தொ)ளாயிரத்துத் தொண்ணூறில்
> மிக்க கரிகால வேந்துதித்து (ப்)-பக்கம்
> அலைக்குந் திரைப் பொன்னி யாறுகரை கண்டான்
> மலைக்குநே ரானபுய மன்"[14]

இந்தப் பாடல் சோழ மண்டல சதகத்தில் காட்டப்பட்டுள்ள பாடலின் முதலடியோடு ஒத்துள்ளது; பிற அடிகள் வேறுபட் டுள்ளன.

இந்தப் பாடலின் கருத்துப்படி சோழப் பேரரசன் இராசராசனின் அண்ணனான ஆதித்த கரிகாலனே, காவிரிக்குக் கரை கண்டான் என்பது போதருகிறது. ஓர் ஆற்றில் அணைக் கட்டுவதும் கரையமைப்பதும் ஒரே வகையான செயல்போல இப்பாட்டில் குறிப்பிடப்படுகிறது. மற்றும், இங்குக் குறிப்பிடப்படும் 'கலியுகம் தொளாயிரத்துத் தொண்ணூறில்' ஆதித்த கரிகாலன்

---

14. Triennial Catalogue of Mackenzie, Vol. 3, Pt. 2 ; p; 719.

தோனறினான் எனும் செய்தி தவறாகும். இந்திய பஞ்சாங்கக் கணக்குப்படி, இன்றைக்கு (1984), கலியுக ஆண்டு 5089 ஆகும். இதில் மேற்கண்ட குறிப்பில் காணும் 990 ஆண்டுகளைக் கழிப்போமானால், 4098 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதித்தன் பிறந்ததாக முடியும். இராசராசனுடைய அண்ணன் ஆதித்த கரிகாலன் என்பதைக் கருத்தில் கொண்டு ஆண்டுக் கணக்கு முறையை அணுகுவோமானால் (கி. பி. 965-இல் அவன் கொலை செய்யப்பட்டான்), 1028 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதித்த கரிகாலன் வாழ்ந்தவனாவான். அப்பொழுது கலியுகம் பிறந்து 4061 ஆகி இருக்க வேண்டும்.

எனவே, இந்தப் பாடலிலும், சோழ மண்டல சதகத்தில் இடம் பெற்றுள்ள பாடலிலும் சுட்டப்படும் ஆண்டு, தவறாக உள்ளன. இதனால், இவை இரண்டும் ஆதித்த கரிகாலனையோ, சங்ககாலக் கரிகாலனையோ சுட்டுவதாகக் கொள்ளுவதற்கு இல்லை !

ஆனால், மெக்கன்சி கையெழுத்துச் சுவடியில், தரப்பட்டுள்ள செய்யுளுக்கு முன்னுரையாக அமைந்துள்ள பகுதியில் "பராந்தக சோழ மகாராசாவின் மகனான கரிகால சோழ மகராசா" எனும் வாசகம் அமைந்துள்ளது. இதனால், 'மக்கள் இடையே பரவி இருந்த செவிவழிச் செய்தி இது' என்பது புலனாகிறது. மற்றும் சோழ மண்டல சதகம் மேற்கோளாகக் காட்டும் பழம்பாடலையும் அரைகுறையாகக் கல்வி அறிவு இல்லாத மக்களும் அறிந்திருந்தனர் என்பதை இதனால் உய்த்துணர முடிகிறது.

கல்வெட்டுச் சான்று

திருவாவடுதுறையில் கிடைத்துள்ள பரகேசரி கரிகாலன் என்பவனுடைய கல்வெட்டில் அவன் (ஆட்சியாண்டு குறிப்பிடப் படவில்லை) "காவிரியின் கரையை உயர்த்தினான்" என்று குறிப் பிடப்பட்டுள்ளது[15]. இதை ஆராய்ந்த பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார், "பரகேசரி எனும் பட்டப் பெயரோடு கரிகாலன் எனும் சிறப்புப் பெயருடைய அரசன் ஒரேவொருவன்தான் சோழர் அரச மரபிலே காணப்படுகிறான். அவன் இரண்டாம் ஆதித்தன் (ஆதித்தன் II)" என்று அறிவித்துள்ளார். ஆனால், அவனுடைய ஆட்சி ஆண்டைக் கி. பி. 865-878 என்று கொடுத்துள்ளார்[16]. ஆட்சி ஆண்டு அச்சுப்பிழை எனக் கொள்ளுவோமானால், ஆதித்த கரிகாலன் காலத்தில், காவிரியாற்றின் கரை உயர்த்தப்பட்டது

---

15. 110 of 1925.
16. Studies in Chola History and Administration, pp. 68-69.

என்பதை ஏற்றுக் கொள்ளலாம். ஆயினும், இங்குக் கல்லணை அமைக்கப்பட்ட செய்தி சுட்டப்படவில்லை என்பது நினைவு கூர்தற்குரியதாகும்.

இவற்றால் அறியப்படுவன யாவை? சங்க காலத்திய கரிகாலன் காவிரியாற்றிற்கு, முதன் முதல் கரை அமைத்தான்; பிற்காலத்தில் அந்தக்கரை இடிந்தும், சிதைந்தும் போயிற்று. அதனை ஆதித்த கரிகாலன் செப்பம் செய்து, அதன் மட்டத்தை உயரமாக்கினான் என்பதே, இந்தக் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள அடைமொழியால் தெரியவரும் செய்தியாகும்.

'இது உண்மையானால், காவிரியாற்றின் குறுக்கே கல்லணையைக் கட்டிய சோழ மன்னன் யார்?' எனும் வினா வீறுடன் எழுகிறது.

வீர ராசேந்திரனா?

வரலாற்றுப் பேரறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள், தம்முடைய 'பிற்காலச் சோழர் வரலாறு' எனும் நூலின் மூன்றாம் பகுதியாகிய 'சோழர் அரசியல்' எனும் நூலில், "திருவரங்கத்துக்குக் கிழக்கே, எட்டு மைல் தூரத்தில், கோவிலடிக்கு அண்மையிலுள்ள பேரணை, கி. பி. 1063 முதல் 1070 வரையில் ஆட்சிபுரிந்த வீரராசேந்திர சோழனால் அமைக்கப் பட்டதேயாகும்"[17] என்று அறிவித்துள்ளார். ஆனால், இம் முடிவிற்கு வந்தமைக்குரிய சான்றுகளை அவர் காட்டவில்லை.

வாழ்நாள் முழுவதும் வடபுலப் போரில் (இராட்டிரகூடர், மேலைச் சாளுக்கியர்) ஈடுபட்டு இருந்த இவ் வேந்தனுக்கு, 'கல்லணையைக் கட்டும் அளவிற்கு ஓய்வும் வசதி வாய்ப்புகளும் இருந்திருக்குமோ?' எனும் ஐயமே மேலோங்கி நிற்கிறது.

இவன் காலத்தில் இயற்றப்பட்ட 'வீரசோழியம்' எனும் இலக்கண நூலில் இவன் புகழ்பாடும் பாடல்கள் பல உள. அவற்றுள் ஒன்றில்கூட, இந்தச் செய்தி சுட்டப்படவில்லை. இன்றுவரை வீரராசேந்திரன் காவிரிக்குக் கரை அமைத்ததையோ, அணையைக் கட்டியதாகவோ அறிவிக்கும் கல்வெட்டுகள் எனக்குக் கிடைக்கவில்லை.

---

17. சோழர் அரசியல், ப. 90.

'கரிகாலன்' எனும் சிறப்புப் பெயர் பெற்றோர்

'கரிகாலன்' எனும் சிறப்புப் பெயருடைய சோழ அரசர்கள் பலர் வாழ்ந்துள்ளார்.

இராசராசனுக்கு முன்னர் சங்க காலத்தில் இருவர் கரிகாலன் எனும் பெயருடையவராக வாழ்ந்துள்ளனர். இராசராசனுடைய தமையன் ஆதித்த கரிகாலன் என்பவனான். இராசாசனுக்குப் பிறகு; வீரராசேந்திர சோழனுக்கும் 'கரிகாலன்' எனும் பட்டப் பெயர் வழங்கியுள்ளது.[18] ஆனால், இவன் 'பரகேசரி' அன்று! இவனுக்குப் பிறகு மூன்றாம் குலோத்துங்கனுக்குக் 'கரிகாலன்'[19] எனும் பட்டம் வழங்கியுள்ளது. ஆனால், இவனுக்குப் 'பரகேசரி' எனும் பட்டம் உண்டு. மேலும் நாற்பது ஆண்டுகள் (கி.பி. 1178-1218) இவன் ஆட்சி புரிந்துள்ளான்.

எனவே, இவனுடைய காலத்தில் இந்த அணை எழுப்பப்பட்டு இருக்கலாம் என எண்ண இடம் உண்டு.

கரையும் அணையும் ஒன்றா ?

பழந்தமிழில் 'கரை' எனும் சொல் வழக்கில் இல்லை! 'சிறை' எனும் சொல்லே பெரு வழக்காக இருந்திருக்கிறது.

''நீர்மிகின் சிறையும் இல்லை !'' (புறநா. 51)

எனும் புறப்பாடல் இதற்குச் சான்றாகும். அரண், காவல், நீர்க்கரை எனும் பொருள்களில் இச்சொல் வழங்கியுள்ளது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் 'கட்டுக்காவல் மிக்க இடத்தை'ச் 'சிறைக் கோட்டம்' எனும் பெயரால் சுட்டும் வழக்கம் தோன்றியது. மணிமேகலை எனும் காப்பியத்தில் 'சிறைக்கோட்டம்' எனும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு 'கரை' எனும் சொல் வழக்கிற்கு வந்தது. 'செயற்கையாக அமைக்கப்படும் வரம்பு, எல்லை' எனும் பொதுப் பொருளிலும் 'நீர்க்கரை' எனும் சிறப்புப் பொருளிலும் இச்சொல் வழங்கலாயிற்று.

'இறுக்கமாகவும் நெருக்கமாகவும் அமைக்கப்படுவது' எனும் பொருளைத் தரும் 'அணை' எனும் சொல், 'அணைக்கட்டு' (Dam) எனும் பொருளில் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டிற்கு முன்பு வழக்கில் இல்லை

---

18. Colas, p. 246, 274.
19. Colas, p. 398.

"அணையைத் தூக்கிச் சென்ற நீர் வெள்ளம்"
(பெரிய. திருஞா. 723)

எனும் அடிகளில், சேக்கிழார், 'நீர்க்கரை' எனும் பொருளிலேயே இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

பாலம் (சேது) எனும் பொருளிலேயே கம்பர்,

"அலை கடற்றலை யன்றுஅணை
வேண்டிய"
(கம்ப. பா. ஆற்று. 9)

எனும் பாட்டில், 'அணை' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

சோழப் பேரரசர் ஆட்சியின் கடைப்பகுதியில் வாழ்ந்தவர் சேக்கிழார். இவர் இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய காலத்தவரா (கி.பி. 1113 - 1150) கக் கருதப்படுகிறார்.[20] இவருடைய திருத்தொண்டர் புராணத்தில், அவருக்கு அண்மைக் காலத்தில் அநபாயனின் (இரண்டாம் குலோத்துங்கனின்) முன்னோருடைய அருஞ்செயல் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"பொன்மலைப் புலிநின்று ஓங்கப் புதுமலை இடித்துப் போற்றும்
அந்நெறி வழியேயாக அயல்வழி அடைந்த சோழன்
மன்னிய அனபாயன்சீர் மரபின்மா நகரமாகும்
தொன்னெடுங் கருவூர் என்னும் சுடர்மணி வீதிமுதூர்"
(திருத்தொ. எறிபத்த. 2)

இப்பாடலில் இடம்பெற்றுள்ள செய்தியையே, தக்கயாகப் பரணி எனும் நூலில், ஒட்டக்கூத்தரும் குறிப்பிட்டுள்ளார்.

"அலைகொன்று வருகங்கை வாராமல் மேன்
மேல் அடைகின்ற குன்றூடறுக் கின்ற பூதம்
மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராசன் ராசன் கை வாளென்ன வந்தே"
(தக்க. தாழி. 549)

இச்செய்தி சுருக்கமாக இராசராசன் உலாவில்,

---

20. Nilakanda Sastri, Colas, p, 612.

"சுழியிட்ட காவிரிக்குச் சோணாடு வாழ
வழியிட்ட வான்காண வாரீர்"

(இராசராச. கண். 85)

என்று சுட்டப்பட்டுள்ளது.

இவ்விலக்கியச் சான்றுகள் யாவும், காவிரியின் நீர். தமிழ் நாட்டில் பாயாதவாறு தடுத்துக்கொண்டு இருந்த மலைப் பாறையை இடித்து, சுரங்கவழி அமைத்த செய்தியைச் சொல்லுகின்றன. ஆனால், ஒட்டக்கூத்தர், இந்தச் செயலை இரண்டாம் இராசராசன் செய்ததாகத் தெரிவிக்கிறார். சேக்கிழாரோ அனபாயன் ஆற்றிய பணியாக அறிவிக்கிறார்.

காவிரியாற்றில் அணைனயக் கட்டி, தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் செல்லாதவாறு தடுத்த கருநாடகத்து ஹொய்சள அரசனோடு போரிட்டு, காவிரியின் நீர்ப்பெருக்குத் தங்கு தடையின்றி ஓடி வருவதற்கு இந்தச் சுரங்கப் பாதை அமைக்கப் பட்டதாக அறிஞர் கூறுவர். எனினும், இச்சான்றுகளில் அணையைக் கட்டியமை பற்றிய குறிப்பைக் காணோம்.

கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நச்சினார்க்கினியர் எனும் புகழ்மிக்க உரையாசிரியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் உரையில் ஒரு பழம்பாடாலைச் 'சிறைவிடுத்தல்' எனும் துறைக்கு மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

"செய்கை அரிய களவழிப்பா முன்செய்த
பொய்கை ஒருவனைப் போந்தரமோ - சைய
மலைச் சிறைதீர் வாள்கண்டன் வெள்ளணி
கொலைச் சிறைதீர் வேந்துக் குழாம்"

(தொல். புறா. 36, நச்சி. உரை. மேற்கோள்)

எனும் பாடலும், முன்னர் நாம் கண்ட ஒட்டக்கூத்தர் பாடலின் கருத்தையே தெரிவிக்கிறது. இக்காலத்தில் 'சிறை' எனும் சொல்லிற்கு 'அணை' எனும் பொருளும் வழங்கிய தாகத் தெரிகிறது.

பிற்காலச் சோழ வேந்தர் காலத்துச் சிறப்புற்று விளங்கிய ஒட்டக்கூத்தர், சேக்கிழார் போன்றோர் சிறப்பித்துப் பேசும் இந்நிகழ்ச்சியோடு - காவிரி நீர்ப் பெருக்கு எடுத்து ஓட வழிகண்ட செயலோடு - "சையமலைச் சிறைதீர் வாள்கண்டன்" பற்றிய செய்தியையும் இணைத்து நோக்குவோமானால், யாதோ ஓர் அரிய

செயல் காவிரியாற்றில் சோழர்களால் செய்யப்பட்டு இருப்பது உறுதிப்படுகிறது. ஆயினும் 'கல்லணையைக் கட்டியவர் யார்?. என்பது ஒரு புதிராகவே தோன்றுகிறது.

நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தவன் மூன்றாம் குலோத்துங்கன். பரகேசரி எனும் பட்டம் உடையவன். முதல் பத்து – பதினைந்து ஆண்டுகளே இவனால் போர்களில் வீணாக்கப் பட்டன. எஞ்சிய ஆண்டுகள் அமைதி வாய்ந்தனவாக இருந்தன. இதனால், கலைஞர்களையும் புலவர்களையும் இவன் போற்றிப் புரந்தான். திருவிடைமருதூர்க்கு அருகில் 'திரிபுவன ஈச்சுவரம்' எனும் கோயிலை இவன் எழுப்பினான். இவனுக்குக் 'கரிகாலன்' எனும் சிறப்புப்பெயர் வழங்கியது. ஒருகால், இவ்வரசன், காவிரி யாற்றின் குறுக்கே கல்லணையைக்கட்டி இருக்கலாமோ என எண்ணுவதற்கு இடம் உண்டு. அறிஞர்கள் ஆராய்ந்து தெரிவிப்பாராக.

வட்டாரவியல் தத்துவம் பற்றிய ஓர் அறிமுகம்

மு. அ. முகமது உசேன், எம். ஏ.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி,
கும்பகோணம்.

1. முன்னுரை
2. வட்டாரவியல்
3. வட்டாரவியல் பிரிவுகள்
3 : 1 புவியியல் பிரிவு
3 : 2 அரசியல் பிரிவு
3 : 3 சமூகப் பிரிவு
3 : 4 பொருளாதாரப் பிரிவு
3 : 5 கலாச்சாரப் பிரிவு
3 : 6 மொழியியல் பிரிவு
4 முடிவுரை

1. முன்னுரை :

வட்டாரவியல் (Regionalism) ஒரு தனித்துறையாகும். அனைத்துத் துறைகளோடும் சம்பந்தப்பட்டுள்ள இத்துறை சமூகவியலோடு மிக நெருங்கிய தொடர்புடையது. புவியியல் (Geography) நிலவியல் (Geology) இனவியல் (Ethnology) சுற்றுப்புறச் சூழ்நிலையியல் (Ecology) பொருளாதாரவியல், அரசியல், மானுடவியல், மொழியியல், போன்ற துறைகளோடு இணைத்து வட்டார இயலைப் பகுக்க இயலும். தமிழில் இதுவரை வட்டாரவியல் பற்றி அங்கொன்றும், இங்கொன்றுமாக மேலோட்டமாகக் கூறப்பட்டுள்ளதே அன்றி, தெளிவாக, பல்வேறு துறைகளோடு சம்பந்தப்படுத்தி முறையான பகுப்பாய்வு செய்து நூல் எதுவும் எழுதப்படவில்லை. இலக்கியத்தில் வட்டார வியலைக் குறிப்பிடும் சில திறனாய்வாளர்கள் மொழிப் பகுப்பைப் பிரதானப்படுத்தியும்[1] வேறு சிலர் வட்டாரப் பேச்சு முக்கியமல்ல, பிரச்சினைகளே[2] முக்கியம் என்றும் கூறியுள்ளனர். இக்கட்டுரையில் வட்டாரவியல் என்ன என்பது ஒரு அறிமுக நிலையில் ஆராயப்படுகிறது.

2. வட்டாரவியல் :

"ஒரு வட்டாரம் என்பது அருகிலுள்ள பகுதியிலிருந்து சிறப்பித்து வேறுபடுத்திக் காட்டக் கூடியதாகவும், ஒரே சீராய்

உள்ள குறிப்பிடத்தக்க ஒரே இனத்துடன் இணைந்த மக்கள் வாழ்க்கையைக் கொண்ட ஒரு நிலப்பரப்பு ஆகும்''[3] சில குறிப்பிட்ட பிரச்சனைகளுக்கு நிகழ்வுகளமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் பொருத்தமில்லாப் பிரச்சனைகளைப் புறக்கணிக்கக் கூடிய தன்மையையும் அவ்விடம் பெற்றிருக்க வேண்டும். நாடு, அதன் உள் பிரிவான மாநிலம், மாவட்டம் போன்ற எல்லைக் கோடிட்ட நிலப்பரப்பு மனம் போன போக்கில் பிரிக்கப்பட்டவையாகும். ஆவை மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும். ஆனால் வட்டார நிலப்பிரிவோ ஒரே சீரானதும், இனச்சார்பு உடையதும் ஆகும். "ஒரு நகரத்தைச் சுற்றியுள்ள பகுதி, ஆற்றங்கரையை அடுத்துள்ள வண்டல் பூமி, கிளை ஆறு ஓடும் பகுதி போன்ற ஏதேனும் ஒரு பகுதியை மையமாகக் வைத்துக் கொண்டு, தட்பவெட்ப நிலை, மழை,காடு இவை போன்ற இயற்கை நிலவியலை அடிப்படையாகக் கொண்ட ஒரே சீரான இயைபுடையது வட்டாரம் (Region) என்று அழைக்கப்பெறும்.[4]

தனித்த அல்லது பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கிய மக்கள் குடியிருப்புப் பகுதியாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பும் வட்டாரமாக அழைக்கப்படும். இவை எல்லாவற்றையும் விட சமூக விஞ்ஞான அடிப்படையில் சிறப்பாகக் கூற வேண்டுமே யானால், மனித இன ஆராய்ச்சி, கலாச்சாரம், மாநில மொழியியல், தட்பவெட்ப நிலை, நிலவியல்,தொழில்துறைப் பகுதி,அல்லது நகரம், குறிப்பிடத்தக்க பொருளாதாரச் சிறப்பு (வடஅமெரிக்காவில் உள்ள பருத்தி நிலப்பகுதி போல) உள்ளாட்சித்துறை அமைப்பிலான பகுப்பு முறை (சிறந்த ஜனநாயக ஆட்சிக்கு உதாரணமாக அமையும் ஆங்கில நாடு போல) சர்வதேச அரசியல் அரங்கு (மத்திய கிழக்கு நாடுகள் போல) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு அமையும்''[5].

இனி வட்டாரவியல் சமூக நிலையில் எவ்வாறு வளர்ந்த தென்பதைப் பார்ப்போம். பெர்லெக்—பெருசிஸ் (Berluc-Perussis) என்ற பிரான்சு கவிஞரால் வட்டாரம், வட்டாரவியல் என்ற சொற்கள் 1874 வாக்கில் கையாளப்பட்டாலும் 1890 ல் தான் இது உலகில் பொதுச் சொல்லாயிற்று. வட்டாரவியல் என்றால் கூட்டமைப்பு என்று பிரகடனப்படுத்திய அதே வேளையில் கூட்டாட்சிக்கும் (Federalism) அதிகாரங்களைப் பரவலாக்கு வதற்கும் (decentra lisation) இடைப்பட்டதாக அச்சொல் கருதப்பட்டது இது அரசியல் இயக்கமாக பிரான்சில் மலர்ந்த போது பின் வரும் கோரிக்கைகளை முன் வைத்தது.

1. சிறுபான்மையினரின் அரசியல், கலாச்சார வாழ்க்கைப் பிரச்சினை.
2. அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்குதல்.
3. மாநில சுயாட்சி
4. தாய் நாட்டுப்பற்று (Cult of Homeland)
5. மண்ணின் மைந்தர்கள் என்னும் இன தேசியப்பற்று. (Local patrioticism)

இந்த இயக்கம் தோன்றியபோது இது ஒரு பிரிவினை இயக்கம் என்று பரவலாகப் பேசப்பட்டது. என்றாலும் வட்டாரப்பிரச்சினை தவிர்க்கவியலாதது மட்டுமல்ல, மேலே குறிப்பிட்ட சிறப்பம்சங் களால் மற்ற நிலப்பகுதியோடு பிரித்துப் பார்க்க வேண்டியதுமாகும். இது அப்பகுதியின் நன்மை கருதியே என்பதால் பிரிவினை ஆகாது என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

இலக்கிய ரீதியாக மற்றொரு வட்டாரவியல் இயக்கம் 1930 வாக்கில் அமெரிக்காவில் தோன்றியது. ஓவியம் வரைவதில் சமூக அழுக்குகளை அடையாளம் காட்டிய இவர்கள் "ஆஷ்கன் பள்ளி ஓவியர்கள்" (Ashcan School Painters) என்றழைக்கப் பட்டனர். யாங்கிப் பகுதியில் பிறந்த வால்ட் விட்மன் போன்றவர் களும் வட்டார தேசிய இனப்பற்றுடைய மண்ணின் மைந்தர்களே ஆவார்கள்.

3. வட்டாரவியல் பிரிவுகள் :

வட்டாரவியல் பின்வருமாறு பிரிவுகளை உடையது.

1. புவியியல் பிரிவு
2. அரசியல் பிரிவு
3. சமூகப்பிரிவு
4. பொருளாதாரப்பிரிவு
5. கலாச்சாரப்பிரிவு
6. மொழியியல் பிரிவு

3. 1. புவியியல் பிரிவு :

புவியியல் பிரிவில் நிலவியல், (Geology) நவீனதுறை யான சுற்றுப்புற சூழ்நிலையில் (Geology) ஆகியவைகளை இதனுள் அடக்கலாம்.

நிலத்தின் அடிப்படையில் வட்டாரம் பிரிக்கப்படும்போது அருகிலுள்ள பகுதிலிருந்து அது வேறுபடுத்தக்கூடியதாக அமைந்திருக்க வேண்டும். புவியியல் பிரிவில் கவனிக்க வேண்டியது சூழ்நிலை அமைப்பு ஆகும்.

ஒரு இடத்தை வட்டாரமாகப் பகுக்கும்போது மேலோட்டமாகப் பார்க்க வேண்டியது. "இது நல்ல மண் வளப்பகுதி தானா அல்லது பாலை நிலப்பகுதியா?" என்பதாகும். இதன் அடிப்படையிம் நிலத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம்.

1. ***வண்டல் மண் பகுதி:*** *(Alluvial Plain)*

ஆற்றங்கரையை அடுத்துள்ள பகுதியாகவும், விவசாயத்திற்குத் தகுந்த பகுதியாகவும் இப்பகுதி அமையும்.

2. ***மேட்டுச் சமவெளிப்பகுதி :*** *(Plateau Lands)*

நஞ்சை, புஞ்சை பகுதிகள் உடையதாக இவ்விடம் அமையும்.

3. ***மலைப்பகுதி :*** *(Mountain Lands)*

ஐந்திணைப்பகுதியில் குறிஞ்சியின் பாற்படும் இப்பகுதி.[9]

இவை ஒவ்வொன்றிற்கும் பல உட்பிரிவுகள் உண்டு. இதில் மனிதன் வாழத்தகுந்த நிலைப்பகுதிகளும் வாழ இயலாப் பகுதிகளும் உண்டு. அந்த அந்த இடத்திற்குத் தகுந்தாற்போன்ற பறவைகள். மிருகங்கள், செடி கொடிகள் அமையப் பெற்றிருக்கும். அங்குள்ள தட்பவெட்பநிலை, மழை, கடல் மட்டத்திலிருந்து அவ்விடம் உள்ள நிலை இவைகளை ஒட்டியே மேற்கூறிய பறவைகள், மிருகங்கள், செடிகொடிகள் போன்றவற்றின் இனம் ஆகியவை மாறும்; மனிதன் வாழ்நிலையும் அவன் செயல் முறையும் அமையும். தொல்காப்பியரின் ஐந்திணைப் பாகுபாடு இதனோடு இணைத்துப் பார்க்கக் கூடியது. இதுபற்றித் தனியாக ஆய்வு மேற்கொள்ளலாம்.

சூழ்நிலை அமைப்பு மிருகம், பறவை, செடிகொடி ஆகியவைகளுக்குப் பிரதான காரணமாக இருந்த போதிலும்,மனிதன் சூழ்நிலையைத் தன் ஆளுகைக்குக் கொண்டு வந்து அதைத் துணைக் காரணமாக மாற்றலாம். மனிதனின் விடாமுயற்சி, விஞ்ஞான வளர்ச்சி, அரசியல் விழிப்புணர்ச்சி இன்ன பிற காரணங்களால் சூழ்நிலையை இரண்டாந்தர அமைப்பாக மாற்ற மனிதனுக்கு வாய்ப்புண்டு. ஆனால் இம்மாதிரி மாற்றுவதற்கான காலக் கெடுவை நாம் வரையறுத்து விட முடியாது.

2. அரசியல் பிரிவு

வட்டாரவியல் சமூக மாற்றம் பெற்று ஒரு இயக்கமாக மலரும் பொழுது அது அரசியல் வடிவம் பெறுகிறது. ஒரு நாட்டின் எல்லைக்கோடுகளே அரசியல் வட்டாரவியவைக் குறிக்கும் பிரிவு அளவாக அமைகின்றன. இவ்வெல்லைக் கோடு அரசியல் மாற்றங்களை ஒட்டி விரிவு படலாம் அல்லது சுருங்கலாம். வல்லரசுகளின் மேலாதிக்கத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலக அரங்கின் சர்வ தேசியப்பிரிவு மூன்று வகை மண்டல நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதும் இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

வட்டாரவியல் அரசியல் பிரிவுகளை மூன்று வகையாகப் பகுப்பர்.

1. *அரசியல் மற்றும் பண்பாட்டு இயக்கம் :* *(Cultural & Political Movement)*

ஒரு குறிப்பிடத்தக்க பகுதியில் வாழ்வோர் பொருளாதாரத்தில் மேம்பட்டு வாழலாம். இதனால் அவர்களது பண்பாடும் வழக்க வழக்கமும் வாழ்க்கைநிலையும் சீரிய நிலையில் இருக்கலாம். இம்மாதிரியான வாழ்க்கை வாழ்பவர்கள் சமூக அந்தஸ்து உடையவர்கள் எனக் கருதப்படுகின்றனர். அந்தப் பகுதியிலேயே மற்றொரு இடத்தில் மக்கள் வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்வார்கள். அவர்களை வறுமைப் பிடியிலிருந்து விடுவித்து மேம்படுத்த வேண்டியிருக்கும். அவர்களுக்குப் பாதுகாப்பும், ஊக்கமும், உற்சாகமும் அளிக்க வேண்டி இருக்கும். இச் சூழ்நிலையில் நலிவுற்றோரை உயரச் செய்ய அனைவரையும் சமம் என்று கருதச் செய்ய அரசியல் ரீதியாக ஒரு இயக்கம் தோன்றத்தான் செய்யும். இவ்வாறு தவிர்க்க இயலாது தோன்றும் வட்டார அரசியல் இயக்கங்கள் அம்மக்களின் கலாச்சாரத்தின் பெயராலும், வட்டாரச் சிறப்பின் பெயராலும் மக்களைத் தட்டி எழுப்பி விழிப்புறச் செய்யும். அதுவே வட்டாரவியல் அரசியல் மற்றும் பண்பாட்டு இயக்கமாகும்.

2. *அரசியல், நிர்வாக இயக்கம் :* *(Adminisrrative & Political Movement)*

உள்ளாட்சித்துறை (Local Govt)உலகில் தொன்றுதொட்டு இருந்துவரும்-அரசியலில் மக்கள் அங்கம் வகிக்கும்-முறையாகும். பிற்காலத்தில் மத்திய அரசு வலுவான போது உள்ளாட்சி முறை வலுவிழந்து போயிற்று. இதனால் கிராமப்புற மக்கள் அரசியல் அமைப்புகளிலிருந்து துண்டிக்கப்பட்டனர்; மனக்கசப்பும் வெறுப்பும் அடைந்தனர். உள்ளாட்சி அமைப்பிற்கும் அரசுக்கும் ஜனநாயக

இணைப்புச் சக்தியாகச் சில அரசியல் இயக்கங்கள் தோன்றின. இவை மக்கள் அனைவருக்கும் நேரடியாக அரசியலில் ஈடுபட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தின. தொன்றுதொட்டு இருந்துவரும் உள்ளாட்சிமுறையும், நவீன அரசு நிர்வாகமும் இணைந்து செயல்பட முனைந்த இயக்கங்கள் நிர்வாக அரசியல் இயக்கம் என அழைக்கப்பட்டன.

3. *பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பணித் திட்டம் :* *(Public Administration & Public Planning)*

ஒரு நகரம் பின் தங்கிய நிலையில் இருக்கலாம். தொழில் வளர்ச்சி இல்லாமல் இருக்கும் பகுதியை ''பின் தங்கிய பகுதி'' என்று அரசு அறிவித்து அங்குத் தொழில் தொடங்க முன் வருவோருக்கு மானியமும், முன்னுரிமையும் வழங்குவதைக் காணலாம். அதே போல் ஒரு நகரத்தைத் திருத்தி அமைக்க அல்லது மேம்படுத்த, பெருகி வரும் மக்கள் தொண்டுக்கு ஏற்றாற் போல் திட்டத்தை விரிவுபடுத்த மேலும் புதிய திட்டங்களை உருவாக்க, தொழில்மயமாக்க அரசு நிர்வாகம் பொதுப்பணித் திட்டங்களை நிறைவேற்றும். நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தை வட்டாரவியல் (Regional Planning) நகர வளர்ச்சித் திட்டம் என்பர். இந்தப்பொது நிர்வாகம் மற்றும் பொதுப் பணித்திட்டம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே செயல்படும் ஒரு பாலமாகும். இவ்வாறு பொதுப்பணித் திட்டங்கள் நிறைவேறும் பகுதிகளும் அரசியல் பிரிவு வட்டாரவியலாகக் கருதப்படும்.[10]

இனிய வட்டாரவியல் அரசியலில் பெறும் இடத்தைக் காண்போம். முன்பு கூறியது போர வட்டாரவியல் ஓர் இயக்கமாக பிரஞ்சில் 1890-ல் உதயமாயிற்று பிரஞ்சு வட்டாரவியல் இயக்கம் (French Regional Movement) என்று வருணிக்கப்படும். இவ்வியக்கம் ஏனைய நாடுகளிலும் பரவியது. ஸ்பெயினில் இதே கால கட்டத்தில் இவ்வியக்கம் இருந்தது எனலாம். இவ்வியக்கம், வளர்ச்சி குன்றிய நிலையில் இருக்கும் சிறுபான்மை ஒரே இன மக்களைக் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை. அதனால் அவர்கள் பயனும் பெற்றனர். உதாரணமாக இவ்வியக்க வளர்ச்சியால் ஸ்காட்லாந்திற்கு இங்கிலாந்து ஒரு சில அரசியல் அதிகாரங்களை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று அண்மைக்காலத்தில் வேல்ஸ் மக்களுக்கு அவர்களுடைய தனித்த இனவேறுபாடு, கலாச்சார அடிப்படையில் பல சலுகைகளை வழங்கியுள்ளது.[11]

அண்மைக்காலத்தில் இந்தியாவில் வரலாறு-வட்டாரவியல் ஆய்வுத்துறையில் ரொமிலதாப்பர், இர்பான் ஹபீப் போன்றோர்

ஆய்வுகள் பயனுற்றவையாய் உள்ளன. வரலாற்று வட்டாரவியல் ஆய்வில் தென்னாட்டை ஆய்ந்து பல நூல்கள் வெளியிட்ட கே. நீலகண்ட சாஸ்திரியைப் புகழும் ரொமிலா தாப்பர் வங்காளம் மகாராஷ்ட்டிரம் போன்ற தனித்தனி மாநிலங்கள் வட்டாரவியல் அடிப்படையில் ஆராயப்படுவதை வரவேற்கிறார். கங்கைச் சமவெளி நாகரிகமே இந்திய நாகரீகம் என்று பேசப்படுவதை மறுபரிசீலனை செய்ய இவ்வாய்வு நல்ல தொடக்கமாக அமையு மென்றும் கருதுகின்றார்.[12]

3. சமூக வட்டாரவியல்

மனிதன் கூடி வாழும் ஒரு சமூகப் பிராணி என்பதை அனைவரும் அறிவர். அவனின் சமூகச்சிந்தனை பல புரட்சி களுக்கு வித்திட்டுள்ளதை வரலாறு வாயிலாக அறியலாம். ஒரு மாபெரும் சமூக மாறுதலுக்கு ஒரு தனி நபர் மாத்திரமே காரண கர்த்தாவாக இருக்க இயலாது. சமூகத்தின் ஒட்டு மொத்த சேவை யும், ஒருமுகப்படும் தன்மையுமே சமுதாய மாறுதல்களை நிகழ் விக்கின்றன. சமூக மக்கள் இடத்தால் ஒன்றுபடுகின்றனர் என்றாலும் ஓரிடத்தில் மையப் பகுதியிலிருந்து விரிவடையும் நிலையில், அவ் விரிவுக்கதிர்களின் இறுதிநிலை வேறொரு மாற்றநிலையை அடைந் திருக்கும்அந்தமாற்ற நிலை மொழியாக அமையலாம்; வேற்று இன மாகஇருக்கலாம். இதன் அடிப்படையில் வேற்று நாடான அரசாகக் கூட அமையலாம். என்றாலும் இயற்கை சுற்றுப்புற சூழ்நிலைகளை யும்மீறி அவன் அடிமைத்தளைகளை அறுத்தெறிவதைக்காணலாம். அவனது இந்த ஆற்றல் சமூக ஆற்றலாகும். இந்த ஆற்றல் பல்வேறு அரசியல் வடிவம் பெறும்போது மனிதனின் வாழ்நிலையும் பல்வேறு வடிவங்களைப்பெறும். இந்தச் சமூக அரசியல் வடிவத்தை ஒட்டி அவனது பண்பாடு அமைகிறது. பண்பாடு தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வருகிறது என்றாலும் காலத்தை ஒட்டி மாறும் இயல்புடையது. பழைய வடிவத்திலிருந்து புதிய உருவத்தைப் பெறும்போது அது வளர்ச்சியே அடைகிறது. இப்படிப்பட்ட பண்பாடு ஒருகுறிப்பிட்ட இடத்தில் சிறப்பான வடிவத்தைப் பெறும். அதை நாம் அவ்வட்டார சமூகப் பண்பாடாகக் கொள்ளலாம். கொள்ளவும் கொடுக்கவுமாகவுள்ள இந்த வட்டார சமூகப் பண்பாடு இந்த இடத்திற்கு இந்தப்பண்பாடு என்ற வரையறை உடையதல்ல. ஐந்திணைக்குரிய ஒழுக்கங்களைக் கூறிய தொல்காப்பியம் அதற்குப் புற நடை கூறியுள்ளது கவனிக்கத் தக்கதாகும்.

ரட்ஜெல் (Ratzel.) போன்ற புவியியல் அறிஞர்கள் இயற்கைச் சூழ்நிலையே (Natural Envoirnment)ஒரு

சமுதாயத்தின் பிரதிபலிப்பாகும் என்று குரல் எழுப்பித் தட்பவெப்ப மாறுதல், நிலப்பாகுபாடு, மண்வளம், கனிவளம், ஆகியவற்றை ஆய்வதே மிக முக்கியம் என்று கூறினார். இதற்கு எதிராக ஜிம்மர்மேன் (Zimmerman) டூவார்ஸ் (Duwors) போன்றோர் வட்டாரத்தன்மை என்ற ஒன்று தனித்திருப்பதாகக் கருதினர். ஆனால் இந்த இரு கருத்துக்களும் உண்மைக்குப் புறம்பானது என்பதுதான் உண்மை.[13] ஆர். பி. ஹால் (R. B. Hall) புவியியல் அறிஞர்களுக்கு அறிவுரை வழங்குவது போலப் "பல்வேறு பண்பாடு வடிவ அமைப்புகளை முறையாகப் பகுத்தறிவதுதான் வட்டாரவியலைப் புரிந்துகொள்ள உதவும். இதற்கு மாறுபாடாக நிலத்தை மேலோட்டமாக வெளி உருவ அமைப்பைக்கொண்டு பிரிக்கும் பழையமுறை தவறான முடிவையே நமக்குத் தரும்[14] என்பது மிகச்சரியானது எனலாம்.

வட்டாரவியல் அறிஞர் ஒரு வட்டாரத்தினைப்பற்றி ஆயும் பொழுது ஒரு அலகாக (Unit) சமூகத்தின் ஒரு பகுதியாக, வட்டாரத்தை ஒரு தனி இடமாகவோ, சமுதாயத்திலிருந்து வேறு படுத்தியோ பார்ப்பது கிடையாது. அப்படிப் பார்ப்பதும் கூடாது.[15]

சமூகவியல் அடிப்படையில் வட்டாரவியலைக்கூற வேண்டு மேயானல் "வட்டாரவியல் என்பது, புவியியல், சமூகவியல், அரசியல் கலந்த கலவை என்றாலும் தனித்து வேறுபடுத்திக்காணக் கூடியது. சுயாட்சித்திட்டம் பண்பாடு ஆட்சிச் சுதந்திரம் ஆகியவை அதற்குண்டு. இவைகள் சொல்லளவில் மட்டுமில்லாமல் செயலில் இருக்கவேண்டும். இல்லை எனில் இதன் சார்பாக வட்டாரவியல் இயக்கங்கள் தோன்றும். அவை பொருளாதார மேம்பாடு என்றும், அரசியல் சுயாட்சி என்றும், மொழிச் சீர்திருத்தம் என்றும், எழுச்சியூட்டும் கவிதை எழுதும் கவிஞர் குழாம் என்றும் பலவாறு கிளைவிட்டுவளரும்.[16]

4. பொருளாதாரப்பிரிவு

பொருளாதார, கலாச்சாரப்பிரிவுகள் சமூகப் பிரிவின் உள்ளடக்கம் என்றாலும் தெளிவிற்காகவும், எளிமைக்காகவும், இவைகளைப் பிரித்துப் பார்ப்பது நலம்.

ஒரு பகுதியில் வாழும் மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுந்துள்ளதைக் காணலாம். எதனால் இந்த ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது ? உற்பத்தி சக்தி, உற்பத்தி உறவு, உடைமை இவைகளிடையே ஏற்படும் முரண்பாடே பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கு அடிப்படைக் காரணம் என்பது மார்க்சியம் இந்த ஏற்றத்

தாழ்வுகள் நீடிக்கப்படுமேயானால், சமூக விழிப்புணர்ச்சி ஏற்பட்டு ஒரு புதிய மாற்றம் நிகழலாம். அம்மாதிரியான மாற்றங்கள் நிகழப் பொருளாதார வட்டாரவியல் ஆய்வு துணை செய்யும். சமூகவியல் பொருளாதார அடிப்படையில் ஒரு வட்டாரத்தை ஆராயப் புகுந்தால் அந்த வட்டாரத்தின் சமூகக் கட்டமைப்பு நிலை, (Social structure.) தெளிவாகும். பல்வேறு நுண்ணிய இழைகளை உள்ளடக்கியுள்ள வட்டாரவியல் பொருளாதார இழையைக் காண்பது எளிது. ஆனால் புரிந்துகொள்வதுதான் அரிது.

பொருளதார ஏற்றத்தாழ்வுக்கு இடம், சூழ்நிலை, காலம் இவை களுக்கு ஏற்பப் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படலாம். எனினும், உற்பத்தி உறவே இதற்குப் பிரதானம் என்பது வெள்ளிடைமலை. வட்டார வியலோடு தொடர்புடைய பொருளாதார ஆய்வே நன்மை பயப்பதாய் அமையும் எனலாம்.

5. பண்பாட்டுப் பிரிவு :

சமூகவியலில் ஓர் உட்பிரிவான இது, இந்தியா போன்ற புராதான நாடுகளில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது பல்வேறு முகங்களைத் தன்னுள் அடக்கியது. இந்தியப் பாரம்பரியப் பண்பாடு சில வேளைகளில் "யானையைப் பிடிக்கத் தோண்டும் பள்ளம் போல் உள்ளது எனலாம். அரசியல், சமூக, பொருளாதார விழிப்பு உணர்ச்சி ஏற்படும்போதெல்லாம் இந்தப் பண்பாடே மக்களுக்குப் பளுவாகவும், போதை மருந்தாகவும் ஆகிவிடுகிறது. பண்பாடு மதத்தின் பெயராலும், தொன்றுதொட்டு வரும் நாகரிகத்தின் பெயராலும், நன்மை, தீமை என்ற பெயராலும், பழக்க வழக்கத் தாலும் மூட நம்பிக்கையாலும் இன்னபிறவகையாலும் மக்களால் கடைப்பிடித்து ஒழுகப்பெறுகிறது.

இந்தியாவில் பொருளாதார சமூகவியலுக்கும் பண்பாட்டுச் சமூகவியலுக்கும் எதிர் எதிர் அணியில் நின்று செயல்படக்கூடிய ஆற்றலுண்டு. இங்கு மிகுந்த செல்வம் பெற்ற ஒரு செல்வந்தர் தாழ்ந்த குடியில் பிறந்திருப்பாரானால், அவர் பொருளாதார அந்தஸ்து பெற்றிருந்த போதும் சமூக அந்தஸ்து (Social Status) பெற இயலாது. இந்தியாவில் சமூக அந்தஸ்து என்பது பிறப்பிலேயே அமைந்த ஒன்றாகிவிடுகிறது. இங்குதான் பண்பாடு செயல்படுகிறது. எனலாம். சமூக நிலையில் நிகழக்கூடிய மாற்றம் இதுவே ஆகும் இம்மாதிரி ஒரு பகுதியிலே இருக்கிற பண்பாட்டை வட்டாரவியல் அடிப்படையில் பகுத்தாய்ந்தால் அப்பகுதியில் சிறப்பியல்புகளைத் தெரிந்து கொள்ளலாம்.

கலாச்சாரப்பிரிவின் கீழ் தமிழ்நாடு வட்டாரவியலை ஆய்ந்த அறிஞர்கள் சிலரைக் கூறலாம். பர்டன் ஸ்டெயின் (Burtorn Steirn) தனது வட்டாரவியல் ஆய்வை, 'விவசாய அமைப்பு முறை (Agrarian System) அடிப்படையில் ஆய்ந்துள்ளதைக் காணலாம்.[17] கதீலீன் காஃபீ, ஹரில் ஹர்மா ஆகியோர், பதிப்பித்துள்ள ஒரு நூலிலும் இந்த அடிப்படையிலேயே ஆராயப்பட்டுள்ளது.[18] தர்மகுமார் எழுதிய Land & Caste in South India: Agriculture labour in the Madras Presidency during 19th century (Cambridge, 1965) என்ற நூலும் அதே போன்ற ஒன்றே.

ஆகவே பண்பாட்டுப் பிரிவின் கீழ் ஆயப்படும் வட்டாரவியல் பகுப்பால் அவ்வட்டாரத்தின் சமூகக்கட்டமைப்பு (Social structure) சமூக ஏற்றத்தாழ்வு, படிக்கட்டு நிலை (Social stratification) ஆகியவைகளை அறியலாம்.

6. வட்டார மொழியியல்

மொழியானது சமுதாயத்தில் வாழும் மனித இனத்தின் நிலை, முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமுதாய நிலை, பொருளாதார நிலை போன்ற பல பெரும் பிரிவுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாகச் சில மொழிக் கூறுகளுக்கும் (Linguistic factors) மற்றும் சமூகக் கூறுகளுக்கும் (Social factors) இடையே மிக நெருக்கமான தொடர்புகள் ஏற்படுகின்றன. இவ்வாறு ஏற்படும் சமூக மொழியியற் தொடர்புகளையும் (sociolinguistic relationship) இவற்றோடு இணைத்துப் பார்க்கக்கூடிய-செயல்படக்கூடிய வேறு சில உட்கூறுகளையும் (internal factors) மையமாகக் கொண்டு மொழியியலமைப்பையும் (language structure) மொழியின் பொதுத் தன்மையும் (Linguistic Commonality) மொழி ஆற்றலையும் (linguistic efficiency) மொழியின் தனித்தன்மைகளையும் (linguistic individuality) மொழித்திட்டமிடுதல் (language planning) மொழியில் புதுமையாக்கம் (modernization) மொழியில் நிலைபேறு (standardization) ஆகியவற்றை ஆராய்ந்து பாகுபாடு செய்து எடுத்துரைத்தும் வரும் ஒரு மொழியியற்பிரிவே சமுதாய மொழியியல் (socio-linguistics) என்பதாகும்,

மொழிக்கு மொழி கிளை மொழிக்குக், கிளை மொழி (Dialect) மொழிக்குடும்பத்திற்கு மொழிக்குடும்பம் அவ்வவற்றின் மொழியமைப்புகளில் வேறுபட்டே நிற்கின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். இவ்வேறுபாடுகளுக்குப் பலவகைப்பட்ட காரணங்கள் சொல்லப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அந்தந்த மனித இனத்

தின் சூழ்நிலை, பண்பாடு நாகரிகம் போன்றவற்றின் இயல்பிற் கேற்ப மொழிகளும் கிளை மொழிகளும் வேறுபட்டே காணப் படுகின்றன வழங்கப்படுகின்றன, எனலாம்.[20]

மொழி சமுதாய அமைப்போடு பின்னிப் பிணைந்திருப்பதால், சமுதாயத்தில் மொழி மாறுபாடுகள், கிளைமொழி வேற்றுமைகள் (dialect variations) போன்றவை தொடர்ந்து இருந்தே வருகின்றன

இந்திய நாட்டைப் பொருத்தவரையில் சமுதாயவியற் பாகுபாடு (Socio-linguistic classification) என்பது இந்திய நாட்டுச் சமூகங் களில் காணப்படும் சாதி இனப்புரிவுகளை அடிப்படையாகக் கொண்டே, பெரும்பாலும் செய்யப்பட்டு வந்தது ; செய்யப்பட்டும் வருகிறது. இதற்குச் சொல்லப்படும் முக்கிய காரணம் இந்திய நாட்டுச் சமூகங்களிடையே காணப்படும் சிக்கலான சாதி அமைப்பே (rigid caste system) என்று கூறுகின்ற டாக்டர் கருணாகரன் ஆதாரமாக பிரைட்(Brisut). 1960ல் எழுதிய நூலையும் ரெயிஸ்மன் (Reissman). 1967ல் எழுதிய நூலையும் காட்டுகிறார்.[21]

ஒரு சமுதாயம் எப்பொழுதும் அது பின்பற்றி வரும் சமுதாயப் பழக்க வழக்கங்கள், பண்பாட்டு முறைகள், கட்டுக்கோப்பு ஆகிய வற்றை விட்டுவிட்டு இன்னொரு சமுதாயத்தின் வலிமையினால் அச்சமுதாயத்தின் பழக்க வழக்கங்கள் பண்பாட்டு முறைகள் கட்டுக்கோப்பு ஆகியவற்றைப் பின்பற்ற தொடங்குகிறதோ அப்போது பண்பாட்டு ஆதிக்கமே (Cultural domination) மேலோங்கி நிற்கும். இவ்வாதிக்கத்தினால் அச்சமுதாயம் அதனுடைய மொழி வழக்குகளில் மாறிவரும் சமுதாய பண்பாட்டுப் பின்னணிக்கு (sociocultural background) ஏற்ற வகையில் வேண்டிய அளவு பல்வேறு மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. இதனால் மொழியில் மாற்றங்கள் அதிகமாகி காலப்போக்கில் மொழி ஆதிக்கமே (language domination) மேலோங்கி நிற்கக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி விடுகிறது என்றும் சொல்லலாம்.[22]

இவ்வாறு மொழி ஆதிக்கம் செலுத்தும் ஒரு பகுதியையும், இடம், இனம் இவற்றோடு தொடர்புடைய கிளை மொழி பேசுவோரையும் கொண்டு வட்டார மொழியில் ஆராயப்படலாம். இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அந்தந்தப் பகுதி பெரும்பான்மை மக்கள் பேசும் மொழியின் அடிப்படையிலேயே மாநிலம் பிரிக்கப் பட்டுள்ளது நினைவு கூறத்தக்கது.

முடிவுரை :-

இக்கட்டுரையில் வட்டாரவியல் என்றால் என்ன என்பது அறிமுக நிலையில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. வட்டாரவியல் பகுப்பாகப் புவியியல் பிரிவு, அரசியல் பிரிவு, சமூகப்பிரிவு, பொருளாதாரப் பிரிவு, பண்பாட்டுப் பிரிவு ஆகியவை கூறப்பட்டன. இவை ஒவ்வொன்றும் என்ன என்பதை ஆங்காங்கு சிறு விளக்கங்களோடு தெளிவாக்கப்பட்டன. பண்பாட்டுப் பிரிவின் கீழ் இந்திய வட்டாரவியல் ஆராயப் படுமானால் அது பயனுடையதாய் அமையும் என்று எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு பகுத்தாய்ந்து வட்டாரவியல் பார்க்கப்படுவதானது பிரிவினையின் பாற்படாது என்றும், சிறப்புக் கருதிப் பிரித்துப் பார்க்கப்படுகிற அதே வேளையில் வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்ற அடிப்படையில் வட்டாரவியல் ஆராயப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

சான்றாதாரம்

1. டாக்டர் மா. இராமலிங்கம், 20 - ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம் (சென்னை 1973), ப. 77.
2. டாக்டர் இரா. தண்டாயுதம், 'தற்காலத் தமிழ் இலக்கியம்' (சென்னை 1976) ப. 42. - 43.
3. The New Encyclopaedia Britanica- Micro Vol. VIII P. 481.
4. Ibid P. 481.
5. Ibid P. 481
6. Encylopaedia of Social Sciences (New York 1953) P. 303.
7. The New Encyclopaedia Britanica - Micro Vol. P. 313.
8. Man and Land insouth Asia. P. 3.
9. Ibid P. 9.
10. Jullin Gould William L. Kabib (Ed) A Dictionary of Social Sciences (1964) P. 583.
11. Ibid P. 584.
12. Romila Thapar, Ancient Indian Social History, P. 16.
13. A Dictionary of Social Sciences Op. Cit. P. 585.
14. Ibid. P. 585.

15. Ibid. P. 585.

16. Ibid. P. 585.

17. Burton Sterin, Peasant State & Society in Medival south India (London 1980).

18. Katheleen Gough & Haris Sharma (ED). Imperialism and Revolution in South Asia (New Yourk 1973).

19. டாக்டர் சி. கருணாகரன், 'சமுதாய மொழியியல்' (சென்னை 75) ப. 3.

20. மேற்படி நூல் - ப. 3. 4.

21. மேற்படி நூல் - ப. 19.

22. மேற்படி நூல் - ப. 31. 32.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

பேராசிரியர் இரா. சண்முகவேலன்
அ. வீ. வா. நி. புட்பங்கல்லூரி,
பூண்டி.

தமிழண்ணலின் *வாழ்வரசி* (1979) யில் அவர் தம் நகரத்தார் சமுதாயத்தில் பிறந்த ஒரு பெண்ணின் கண்ணீர் வாழ்க்கையை மண் வாசனையோடு காட்டுவதை நோக்கமாகக்கொள்ள, *நச்சு வளையம்* (1979) வினைக் கோட்பாடு தத்துவத்தை வலியுறுத்து வதை நோக்கமாகக்கொண்டுள்ளதை இங்கு யாம் உதாரணமாகச் சுட்டலாம். இந்நோக்கங்களை அந்தந்த நாவல்களுக்கேற்ற முறை யில் பின்புல வருணனைகளினாலும், தத்துவக் கருத்துக்களினாலும், அமைப்புக்களினாலும், எடுத்துரைத்தலினாலும் ஆசிரியர் நிறை வேற்றுகின்றார். எடுத்துக்காட்டாக, *நச்சு வளையத்தில்* பயிர், நாற்று, விதைப்பு, அறுவடை எனும் பேரியல் பெயர்களும், ஒவ்வொரு சிற்றியலின் தலைப்பின் கண்ணும் எடுத்தாளப் பெற்ற திருமுருகாற்றுப்படையின் வரிகளும் படைப்பாளரின் நோக்கத்தைப் புலப்படுத்தும் ஊர்தியாக உத்திகள் பயன்படுத்தப் பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு கதையாசிரியர்கள் தமது நோக்கங்களின் அடிப்படையில் பற்பல உத்திகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை அறிந்தோம். இனி, திறனாய்வாளர்கள் இலக்கியங்களின் நோக்கங்களாகக் கருதுவனவற்றைக் காண்போம். பரந்த நோக்கங் களைக் கொண்டு வெளிப்படையாகப் பிரச்சாரம் செய்யாமல் பொருளாதாரம் அல்லது அரசியல் போன்ற கருப்பொருள்களின் மீது பின்னப்படும் ஓர் இலக்கியம் தற்காலத்தில் புறக்கணிப்பிற் குட்பட்டாலும் அடுத்த தலைமுறையில் பரவலாகப் படிக்கப் படலாம் என்பர் ஹென்றி ஹேஜ்லிட் (Henry Hazlitt).[95] கதை யாசிரியர்களின் நோக்கம் அறிவுரை கூறுவதன்று, படிப்பவர்க்கு மகிழ்ச்சியூட்டுவதாகும் என்பர் வேறோர் ஆய்வாளர்.[96] இங்ஙனம் பலப்படப் பாரித்துரைப்பதால் நோக்கமில்லாத இலக்கியப் படைப்பே இல்லை என்று கூறலாம். தமிழ்க் கதையாசிரியர் களிடம் சமுதாய, அரசியல் சீர்திருத்தங்களைத் தோற்றுவிப்பதான இரு நோக்கங்கள் எப்பொழுதும் உள்ளதாகக் கூறுவர்.[97] கதை யாசிரியர்கள் கண்டதையும் கேட்டதையும் எழுதிக்கொண்டிருப் பினும் அவற்றிற்குள் உள் நோக்கம் இருக்கவே செய்கின்றது. இந்திரா பார்த்தசாரதி கீழவெண்மணியில் நடந்த விவசாயிகளின்

போராட்டத்தைத் தன்னுடைய *குருதிப் புனலுக்கு* (1975) அடிப்படையாகக் கொள்வதற்குரிய நோக்கமே நிலவுடைமையாளர்களின் நிலப்புரத்துவக் கொடுமையினை வேரோடு சாய்க்க வேண்டும் என்பதே. இதே போன்று அமைந்த பொன்னீலனின் *கரிசலின்* (1976) நோக்கமும் அதுவே. ஆக, கதையாசிரியர்கள் தம் வாய் திறந்து தம்முடைய நோக்கங்களை அறிவிக்காமல் போனாலுங்கூட மௌனமாகவே மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க முற்படும் முயற்சியினைக் காண்கிறோம். எடுத்துக் கொண்ட பொருளாலும், பார்க்கப்படும் பார்வையினாலும் அத் தன்மையினை நம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு படைப்புக்குள் புதைந்து நெளியும் கதையாசிரியரின் நோக்கங்கள் முன்னர்க் கூறியதுபோல், அவன் தேர்ந்தெடுக்கின்ற உத்திகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. நிரப்பிரபுத்துவத்தின் கொடுமையே மேற்போந்த நாவலின் கருப்பொருள் ஆகும். அதன் தலைப்பே இதனை விளக்குகிறது. இக் கருப்பொருளைக் கதையாக்கப் பிராய்டிசத்தையும், மார்க்ஸீயத்தையும் உத்திகளாகக் கொண்டு கதையைப் பின்னுகிறார் ஆசிரியர். கோபால், சிவா, ராமய்யா நாயுடு, பங்கஜம், வடிவேலு முதலியோரை அக்கோட்பாடுகளின் பிரதிநிதிகளாகப் படைத்திருப்பதுடன் அவர்களின் செயல்களினாலும் பேச்சுகளினாலும் அவர்கள் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளுமாறு செய்திருக்கிறார். அடக்குமுறைகளுக்கு ஆளானவர்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்திற்குப் புறப்படுவதைக் கொடுமைக்குத் தீர்வு காணும் போக்காகக் காட்டுகின்றார். ராமய்யா கிளர்ந்தெழுந்த கூட்டத்தினரைப் பார்த்துப் பின்காணுமாறு பேசுகின்றார்.

> போராட்டங்கிறது எல்லாரோடய ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து துணிஞ்சு செய்ற காரியம். நடுவிலே சோர்ந்து போய்விடக் கூடாது.. நானே இதுவரை உங்களைப் பொறுமையா இருங்கன்னு சொல்லிகிட்டு வந்தவன்தான்... ஆனா... நிலைமையைப் பாக்கிறப்போ, அப்பாவிக செத்துகிட்டுப் போறதுதான் மிச்சமா இருக்கு. கோபால் சார் சொல்ற மாதிரி, நாமதான் கட்டய்யனைக் கொன்னோம்னு, நாயுடு சொல்லத் தயங்க மாட்டான். அவங்க கையிலே பணமும் இருக்குது, அதிகாரமும் இருக்குது ... இது இப்பொ நாம எதிர்த்துப் போராடாட்டி, மனிசங்களா இருக்கறத்துக்குப்பதிலா, உளுமாடாவே இருந்திடலாம்...
>
> (குருதிப்புனல், ப 151)

கதையாசிரியர் கீழவெண்மணிச் சம்பவத்தைக் கற்பனையோடு நாவலாக்கி இருப்பினும் கதையை யதார்த்தத்துடன் சித்திரித்திருப்பது அவர் கொண்டுள்ள நோக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதையே காட்டுகின்றது. ராமய்யாவின் மேற்கண்ட பேச்சு, சூழல் வயப்பட்ட ஒருவரின் யதார்த்தப் பெருமூச்சாகும். எழுத்தாளனின் நோக்கம் யதார்த்தத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக இருக்கலாம்; உண்மை உலகில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைத் திரித்து உருவத்தைக் கெடுக்காமல் காட்ட வேண்டுமானால் அவன் கையாள்கின்ற மொழியைத் தவிரப் பிறிதொரு மார்க்கமும் இல்லை[98] என்பாரின் கூற்று இப்படிப் பட்ட உரை நடையினால் தெளிவாகின்றது.

கதையாசிரியர்களுக்குத் தனிப்பட்ட நோக்கங்கள் இருப்பது போல், தனிப்பட்ட இலக்கிய வகைகளுக்கும் நோக்கங்கள் உள்ளன. துப்பறியும் கதைகளுக்குத் துப்புத் துலக்குவதும், நகைச்சுவை கதைகளுக்குப் படிப்பவர்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதும், வட்டாரக் கதைகளுக்கு அந்தந்த வட்டாரத்தினரின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவதும், சமுதாயக் கதைகளுக்கு நடப்புகளைப் பிரதிபலிப்பதும், சரித்திரக் கதைகளுக்கு அக்காலப் பகுதிகளைச் சித்தரிப்பதும் நோக்கங்களாகின்றன. இவற்றைப் போலவே, உருவகம், நனவோடை, குறியீடு, போன்ற உத்திக் கதைகளுக்கும் தனித்தனி நோக்கங்கள் உள்ளன. சான்றாக, குறியீட்டு நாவலின் நோக்கம் குறித்துப் படைப்பாளர் டி. கே. துரைசாமி (நகுலன்) கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளதைக் காட்டலாம்

> குறியீடு நாவலின் நோக்கம்தான் என்ன? வார்த்தை சூசகமாக இயங்குவது ; ரூபத்திலிருந்து அருபத்திற்கு இழுத்துச் செல்வது; சில மன நிலைகளை, உணர்ச்சிகளை எழுப்புவது; முழு வியாக்கியானத்திற்கு உள்பட மறுப்பது ; யதார்த்த உலகில் ஒரு கசப்பு ; ஒரு தினசரி நரகம் என்பதிலிருந்து ஒரு ஆதர்ச 'உலகத்தை' நோக்கி நகர்வது; இரண்டு பட்டு நிற்பவைகளில் ஒரு ஐக்கியத்தைக் காண்பது ; மனிதன் அபோத பகுதி ஆட்டு விக்க எழுதுவது. ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தை அன்று, ஒரு விவரிக்க இயலாத உணர்ச்சிச் சூழலை உருவாக்குவது.[99]

....கொள்கை

தனிமனிதக் கொள்கை என்றும் தனி மனிதன் சார்ந்திருக்கும் சமுதாயம், இயக்கம், கட்சி, அரசியல் ஆகியவற்றின் கொள்கை

என்றும் கொள்கை இருவகைப்படும். இவ்விரு வகையினுள் தனி மனிதக் கொள்கைக்கும் உத்திக்கும் இடையே உள்ள உறவே இங்கு ஆராயப்படுகிறது.

தமிழ் நாவல் இலக்கியத்தின் முன்னோடிகளுள் பி. ஆர். ராஜமய்யரும் அ. மாதவய்யாவும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய நாவல்களை ஆராய்கையில் நாவல் படைப்பில் தத்தமக்குள் தனித்தனிக் கொள்கைகளைக் கொண்டிருப்பதனை அறிய முடிகின்றது. முதலாமவர், வடமொழி கலந்த தமிழ் நடையில் கதையை எழுதுவதுடன் கதைமாந்தரின் கூற்றுக்களில் பேச்சு வழக்குகளைப் பயன்படுத்தியுள்ளார். இதிலிருந்து பி. ஆர். ராஜமய்யர் தூய தமிழ்நடையில் நாவலை எழுத வேண்டும் என்கிற கொள்கை உடையவர் இல்லை என்பதும், கதைமாந்தரின் பேச்சுகளில் மரபு வழிப்பட்ட உரையாடலைப் பின்பற்றாதவர் என்பதும் புலனாகின்றது. ஆகவே, பி. ஆர். ராஜமய்யரின் மொழிநடைக் கொள்கையானது கலப்பின நடையில் கதை கூறப்படலும், கொச்சை மொழிக் கூற்றில் கதை மாந்தரின் பேச்சுக்களை அமைத்தலும் ஆகும். இக் கொள்கையினைக் கைக்கொள்வதன் மூலம் இதனை ஒரு மொழிநடை உத்தியாகவே *கமலாம்பாள் சரித்திரத்தில்* (1896) வெளிப்படுத்தியுள்ளார். இரண்டாமவர், முதலாமவருக்கு எதிரான மொழி நடைக் கொள்கை உடையவர்; தம்முடைய *பத்மாவதி சரித்திரத்தில்* (1898) கதையைச் சொல்லும் மொழிநடையில் மரபு வழிப்பட்ட அல்லது இலக்கண வரம்பு மீறாத மொழிநடையில் கதையினை எழுதியுள்ளார்; இடையிடையே இழிசினக் கதை மாந்தர்களின் உரையாடல்களை அவர்தம் இயல்பிற்கேற்றவாறு வழுச்செறிந்த வாய்மொழிகளில் படைத்திருக்கின்றார்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

நடுகற் குறிகளும் சுடுமட் கலங்களும்

க. குழந்தைவேலன்
கல்வெட்டாய்வாளர்.

தொல்பொருள் ஆய்வுத்துறையின் நடுகற் கண்டுபிடிப்புத் தமிழக வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. நடுகற்கள் தமிழ் மக்களின் நானில வாழ்வியல் உண்மைகளையும், பண்பாடு, மொழிக்கூறுகளையும் பற்றிய இலக்கியக் கூற்றுக்களையும் அரண் செய்து மெய்ப்பிக்கின்றன.

இந்நடுகற்கள் கூறத் துடிக்கின்ற பல்முனைக் கூறுகளையும் ஆராய்தல் இங்கு மிகையாதலின் நடுகல் உருவ அமைதியில் உள்ள ஐயப்பாடுகள் சிலவற்றை இலக்கியம், பெருங்கற்சின்னங்களின் துணை கொண்டு தெரிவிப்பதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம்.

தமிழகத்தில் காணப்படுகின்ற நடுகற்களில் ஏறத்தாழ பத்தில் ஒரு பங்கே எழுத்துடை நடுகற்கள். அவற்றுள் படியெடுத்து வெளியிடப்பட்ட நடுகற்கள் 112. இவற்றுள் ஐம்பத்து மூன்று நடுகற்களில் வீரர்களின் காலருகில் இருவகை ஏனங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல் வெட்டுக்களைப் படியெடுப்பதிலும், பதிப்பதிலும் ஈடுபட்ட கல்வெட்டாய்வாளர்கள் இவற்றைச் சிமிழ் என்றும், கெண்டி என்றும் எழுதியுள்ளனர்.[1] இக்கல்வெட்டுகளில் சிலவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்த திரு. கே. ஜி. கிருட்டிணன் "சிமிழ் எனக் கூறப்பட்ட பொருள் இன்னும் விளக்கம் பெறவேண்டும். சிமிழுக்கும் இதற்குமுள்ள பொருத்தம் தெளிவில்லை, இது ஏறத்தாழ ஒரு பீடமாக அல்லது இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நினைவுக்கோயில் வடிவாக தோன்றுகிறது" எனக் கூறியுள்ளார்.[2]

கல்வெட்டாய்வாளர்கள் தோற்றப்பொலிவு ஒன்றினையே மனங்கொண்டு சிமிழ் என்றும், கெண்டி என்றும் கூறிப்போந்தனரே யன்றி இவற்றைப் பற்றி ஆராய வாய்ப்பின்றி விட்டுவிட்டனர் போலும். திரு கே. ஜி. கிருட்டிணன், பட்டோர் கல்லைப் பரவுகின்ற மரபையும், இறந்தோர் நினைவாக எடுக்கப்பட்ட பிற்காலப் பள்ளிப்படைக் கோயில்களையும் கருத்திற்கொண்டு இஃது ஒரு பீடமாகவோ அல்லது கோயில் வடிவாகவோ இருக்க வேண்டும் எனக்கூறி மேற்கொண்டு ஆயத்தம் கட்டுரையின் நோக்கு

1 செங்கம் நடுகற்கள் தருமபுரி மாவட்டக் கல்வெட்டுக்கள் தொகுதி
2. Seminar on Hero Stones.

இடந்தராமையாலோ விரிவஞ்சியோ மேற்செல்லவில்லை. நடுகற்களைப் பற்றி விரிவாக எழுதிய தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் மதுக்குடத்தின் சகசாயலெனக் கோடிகாட்டி பின்னோர் ஆய்வுக்கு வழிவகுத்துச் சென்றுள்ளார்.[3] எனவே இது பற்றிய ஒரு தெளிந்த ஆய்வினை மேற்கொள்ளல் இன்றியமையாதது.

பெருங்கற்காலச் சின்னங்கள் தொல் தமிழகத்தின் பண்பாட்டுக் கோலங்களை நாளும் நாளும் விளக்கி வருகின்றன. பெருங்கற் சின்னங்களில் கிடைத்துள்ள வனப்பும் வினை மாண்பும் உடைய மட்கலங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்திக் கொண்டுள்ளன. ஆனால் அக்கலங்கள் எவ்வெத் தேவைகளுக்காகப் பயன்பட்டன என்பதும் ஈமக்குழிகளில் (பெருங்கற்சின்னங்கள்) இவ்வளவு மட்கலங்களை ஏன் இட்டு வைத்துள்ளனர் என்பதும் சிந்திக்கத் தக்கன.

இதற்கு விடைகாண நமது பண்டைய இலக்கியங்களையுப் ஈண்டுக் கணக்கிற் கொண்டு ஆராயின் நல்ல விடை கிடைக்க ஏதுவாகும்.

சங்க கால மக்கள் வாழ்வில் கள்ளும் (நறவு) ஊனும் பெற்ற பேரிடத்தைக் கடவுளும் பெற்றிரார் எனும் அளவுக்கு இவை விரித்துப் பேசப்படுகின்றன. புரவலரை நாடி வரும் இரவலர்களுக்கும், புலவர்கட்கும் கள்ளும் ஊனுமே சிறந்த விருந்தாகக் கொடுக்கப்பட்டன. அரசர்கள் கொடுத்த பொன்னையும், பொருளையும் விட கள்ளையும், ஊனையும் பெரிது படுத்தினர் புலவர். அவர்கள் மன்னனைக் கள்ளும் ஊனும் உண்டு உவந்து வாழவே வாழ்த்தினர்.

> "யவனர் நன்கலந் தந்ததண் கமழ்தேறல்
> பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
> ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்
> தாங்கினி தொழுகுமதி யோங்குவாள் மாற" புறம். 56

> "ஒண்டொடி மகளிர் பொலங்கலத்தேந்திய
> தண்கமழ் தேறன் மடுப்ப மகிழ்சிறந்
> தாங்கினி தொழுகுமதி பெரும"— புறம் 24

எனத் தேறலுண்டு மன்னன் மகிழ்ந்திருக்க வாழ்த்தினர்.

அத்தகைய மன்னர்கள் மாண்டபொழுதும் "காடு முன்னினே கட்காமுறுநன்" என்றும், நடுகல்லின் முன்னின்று "சிறுகலத்து

3. நாகசாமி, இரா, டாக்டர். செங்கம் நடுகற்கள்.

குப்பவும் கொள்வன் கொல்லோ'' எனவும் கையற்று ஏங்கினர். அவ்வேக்கத்தினும் அவர்கள் கண்முன் நின்றதெனின், கள்ளின் மாட்சி அளவிடற்பாலதோ.

ஒரு நாட்டின் சிறப்பு நெல்லும் நீரும் மட்டுமன்று கள்ளும் நறவும் ஊனுமே என்னுமாப்போல நாடு கள் நிறைந்தது. நகரம் கள் நிறைந்தது, தெருக்கள் கள் நிறைந்தன. பாக்கம் கள் நிறைந்தது. குன்றம் கள் நிறைந்தது எனப் பலவாறு புகழப்படுகின்றன. கள் நிறைந்த இவ்விடங்களால் சிறந்தான் என்னும் பொருள்பட அரசனும் புகழப்படுகிறான்.

'' மட்டார் மருகின் முதிரத் தோனே'' (புறம்-160)

'' நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மருங்கு'' (அகம்-126)

'' களிறு கவளம் போல
நறவுப்பிழிந் திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றின்
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே '' புறம் 114

'' ஆர்கலி நறவின் அதியர் கோமான் புறம் 12

'' கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே '' புறம் 18

'' கள்ளரிக்குங் குயஞ்சி சின்
மீன்சீவும் பாண்சேரி '' புறம் 348

'' கட்கொண்டிக் குடிப்பாக்கம்'' மதுரை 131

'' நறவுமலிப் பாக்கம் '' குறுந். 394

'' நாரரி நறவின் கொங்கர் கோவே '' பதிற்-88

'' பல்குடைக் கள்ளின் வண்மகிழ் பாரி '' நற்-253

'' நாரரி நறவின் எருமை யூரன் '' அகம் 36

'' இன்கனி நறவின் ... நன்னன் '' அகம் 173

'' வண்டுபடு நறவின் வண்மகிழ்ப் பேகன் '' அகம் 262

'' நாரரி நறவின் ...... சேரலாத '' பதிற். 85

இதுவேயன்றி அரசர்களது நாளோக்கம் கள் நிரம்பிய தன்மையும் (புறம்; பெரும்பாண்) புகழப்படுகிறது. இன்னோரன்ன அடிகள் சங்க மக்கள் வாழ்வில் கள்ளின் இடத்தைத் தெள்ளிதின் விளக்கும்.

மேலும் தமிழ் மக்களுடைய வீரவாழ்வின் ஒருபகுதி பகைப புலத்து ஆனிரைகளைக் கவர்தலும் அவற்றை மீட்டலுமாகும்.

இதுவே போரின் தொடக்க நிகழ்ச்சி. இதனை வெட்சி, கரந்தை என திணை வகுத்துப் போற்றினர். பகைப்புலத்துக் கவர்ந்த ஆனிரைகளை இன்கடுங் கள்ளிற்காக விற்றனர். கட்குடிப்பதற்காக மேலும் மேலும் ஆனிரைகளைக்கவர்ந்தனர்.(புறம் 258, 261, 269, 290; பெரும்பாண் 140-42) அத்தகைய கட்காமுறுநர்கள் காடு முன்னினால் நடுகல் எடுத்து வழிபட்டனர். அவ்வழிபாட்டின் சிறப்புக்கூறுகள் படைத்தலாகும். (புறம் 232, அகம் 35) இன்னும் இம்மரபு தொடர்ந்து நடைபெறுகிறது.

இவ்வகை நடுகற்களில் வீரர்களின் காலடியில் அவர்கள் கேட்கும் பொருட்களைப் படைப்புப் பொருட்களாகப் பொறித்து வைத்தல் இயல்பேயாகும். அவர்கள் பெரிதும் வேட்ட பொருள் கள்ளே யாதலின் கட்கலையங்களைப் பொறித்து வைத்துள்ளனர். அதேபோலப் பண்டை மக்களைப் புதைத்த இடங்களிலும் அவர்கள் பயன்படுத்திய (கள்ளும் ஊனும் களித்த) பண்டங்களை இட்டு வைத்தனர் என்பதும் தெளிவு.

கள்ளைப் பற்றி இலக்கியம் கூறும் இடங்கள் பலவற்றில் அதனை வார்க்க உக்கப் பயன்படுத்திய ஏனங்களும் (கலம்) கூறப்பட்டுள்ளன.

" முதுகட் சாடி (புறம். 258)
நாரரி நனைமுதிர் சாடி (புறம். 297)
சாந்து புறத்தெறிந்த தசும்பு (பதிற். 42)
நீலப் பைங்குடம் (பெரும்பான்)
நிரம்பகல் பறியா ... நிரைந்து நெடிதிராத் தசும்பு
(பதிற். 43)
மட்டம் பெய்த மணிக்கலம் குறுந். 193
கள்ளி விரும்பைக் கலம் (மது 308)
பேருர்ட்ட கள்ளிற் கோயிற் கோய் (புறம் 300)
கோய் சொரி நறவம்
துளங்கு தசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
மலைபடு-463
" தீஞ்செறி தசும்பு " (புறம் 239)

எனப் பல வகையாகக் கூறக் காணலாம். இதில் கோய் என்பதனை இலக்கிய ஆசிரியர்களும் உரைகாரர்களும் கள்முகந்து வார்க்கும் ஏனம் என்றும், அது குங்குமச் சிமிழ் போல இருக்கும் என்றும் கூறுகின்றனர். பெருங்கற் சின்னங்களில் கிடைத்துள்ள பல்வகை

ஏனங்களும், உடுக்கை போன்ற மண் பிரிமனைகளும் விளிம்புடனும், விளிம்பற்றும் உள்ள மண் மொந்தைகளும் அதன் வாயை மூடுவதற்கேற்றாற் போன்ற கலசம் போற் கூம்பிய மூடிகளும் ஒன்றின்மீதுஒன்றாக வைப்பதற்காகச் செய்யப்பட்டன போலக் காணப்படுகின்றன. அப்படி வைக்கப்படுபவையே. எனவே இலக்கியக்கோய், பெருங்கற் சின்ன அடுக்கு ஏனங்கள், நடுகல்லில் காணப்படும் சிமிழ் எனப்படும் உருவம் இவை மூன்றும் ஒன்றே என்பதில் ஐயமில்லை. ஆதலின் நடுக்கல்லில் குறிக்கப்படும் சிமிழ் கட்கலயமே.

இரண்டாவதாக வீரனது காலருகில் முன்புறம் மூக்குடைய ஒரு (அடுக்கு) கலசம் காணப்படுகிறது. இது கல்வெட்டாய்வாளர்களால் கெண்டி என இயம்பப்பட்ட மற்றோர் வகை ஏனமே. இத்தகைய மூக்குள்ள ஏனம் ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வில் கிடைத்துள்ளது. இதனைப் பிரிமனைமீது வைத்துக் கூம்பிய மூடியால் மூடினால் இதற்கும் கெண்டி எனப்படும் ஏனத்திற்கும் வேறுபாடில்லை.

மூன்றாவதாக, நடுகல்லில் மேற்கூறிய கலங்களுக்கு அருகில் சிவலிங்கம் போன்ற உருவம் ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் பெருங்கற் சின்னங்களிலோ அல்லது இலக்கியங்களிலோ சிவலிங்க வடிவுகள் பற்றி ஏதும் கூறப்படவில்லை. அதனால் இதனைச் சிவலிங்கத்தோடு தொடர்புபடுத்துவதை விட ஏனங்கள் ஏதேனும் ஒன்றினோடு தொடர்பு படுத்தி ஒப்புமை காணல் சிறப்புடையது. பெருங்கற் சின்னங்கள் பலவற்றில் மட்குப்பிகள் பல கிடைத்துள்ளன. அவை இன்றைய கண்ணாடி மதுக் கிண்ணங்களைப் போலுள்ளன. இம்மதுக்குப்பிகள் போன்ற ஏனங்களும் நடுகல்லில் சிவலிங்கம் எனப்படும் உருவமும் முழுமையும் ஒவ்வா எனினும் பெரும்பாலும் ஒத்துள்ளது. இதனை இலக்கியங்கள் கள்ளிலிரும்பைக் கலம் என்றும், நீலப் பைங்குடம் என்றும் மட்டம் பெய்த மணிக்கலம் என்றும் குறிக்கின்றன. இவற்றை உரையாசிரியர்கள் பச்சைக் குப்பிகள் என்பர். மட்கலங்கள் கருப்பு சிவப்பு ஓடுகளால் செய்யப்பட்டன ஆதலின் உட்பகுதியாகிய கருப்பு நிறத்தில் கள்ளை அல்லது மதுவை வார்ப்பின் அது நீலமணி நிறம் போலத் தோன்றும் போலும். மேலும் கருப்பையே மணிநிறம் எனலும் இலக்கியமரபு. எனவே கள்ளிலிரும்பைக் கலமும், பெருங்கற் சின்னக் குப்பிகளும், நடுக்கல்லின் சிவலிங்கமும் ஒன்றெனத் துணிதலில் தவறில்லை.

இவையே யன்றி பெருங்கற் சின்னங்களில் காணப்படும் பல கலங்களுக்கு இலக்கியங்கள் மூலம் அடையாளங் காண

வாய்ப்புண்டு. பெருங்கற் சின்னங்களில் காணப்படும் சாடிகளும் இலக்கியங்கள் கூறும் நாரரி நனைமுதிர் சாடியும் (புறம் 297) முதுகட் சாடியும் (புறம் 258) ஒன்றே எனலாம். பெருங்கற் சின்னங்களில் பல ஏனங்கள் (மிடாக்கள் அல்லது மொந்தைகள்) இலக்கியங்கள் கூறும் தசும்புகளாக இருக்கலாம். தசும்புகள் சிலவற்றை ஊமைத் தசும்பு என்பதற்கு உரையாசிரியர்கள் விளிம்பில்லாத கள் மிடாக்கள் என்பர். விளிம்பற்ற பல ஏனங்கள் பெருங்கற் சின்னங்களில் காணப்படுகின்றன. எனவே விளிம்புடனும் விளிம்பில்லாமலும் பெருங்கற் குழிகளில் காணப்படும் பல ஏனங்கள் இத்தசும்புகளே எனலாம்.

எனவே நடுக்கல்லில் வீரனது காலடியில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள் கள்ளும் ஊனும் படைக்கும் ஏனங்கள் என்பதும் அவற்றை இறந்தார்க்குப் படைக்கும் முகத்தான் பொறித்து வைத்துள்ளனர் என்பதும், பண்டை மக்கள் வாழ்வில் பேரிடம் பெற்ற கள்ளும் ஊனும் உண் கலங்களே பெருங்கற் சின்னங்களில் காணப்படும் மட்கலங்கள் என்பதும் இவற்றைப் பண்டை இலக்கியங்கள் சான்று கூறி மெய்ப்பிக்கின்றன என்பதும் புலனாகிறது.

வை. கணபதி ஸ்தபதி
முதல்வர்.

அரசினர் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம் - 603 104.
தொலைபேசி எண். 261

பெறுநர்
திரு ச. இராமநாதன்,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

நாள் : 24—11- 86.

பேரன்புடைய பெரியீர், வணக்கம்.

எங்கள் தொழில் நுட்பக்கல்வி இயக்ககத்தின் வாயிலாக அண்மையில் மதுரையில் வெளியிடப்பட்ட 'ஐந்திறம்' நூல் பற்றி தங்களுடைய ஆய்வுக் கட்டுரையினைப் படித்து மகிழ்ந்தேன். என்னுடைய உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்திறம் ஓர் இலக்கண நூல் என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தாலும் இலக்கணத்திற்கு அடிப்படையாகவும் இயல்பாக வும் அமையும் அறிவியல் செய்திகளையே ஐந்திறம் பெரிய அளவில் பேசுகிறது. எனவே தமிழிலே அறிவியல் பேசும் இந்நூலை முற்றிலும் தேர்ந்தறிதல் கடினமே. இதனை எண்ணி எவரும் மனம் சுழிக்க வேண்டியதில்லை. ஐந்திறம் உணர்த்தும் அறிவியல் செய்திகள் சிற்பக்கலை மரபு சார்ந்திருப்பதாலும் அவ்வறிவியல் செய்திகளை எங்களுடைய அன்றாடப் பணிகளில் நடைமுறை படுத்தி வருவதாலும், எங்களை பொறுத்தவரையில், அச் செய்திகள் ஓரளவு நன்றாகவே உணர்வாகின்றன. தாங்கள் அதில் குறிப்பிட்டிருப்பதிற்கிணங்கவும் எல்லோரும் இந்நூற் செய்திகளைத் துய்க்க வேண்டுமென்பதற்கும் ஏற்ப ஒரு விளக்க உரையை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்நூல் வெளியானதும் பாராட்டுக்களை அறிவியல் உலகம் குவித்திடுமென்று நம்புகிறோம்.

புலவர் திரு. வீரபத்திரனார் அவர்கள் எனக்கு முன்பின் தெரியாதவர். இவர் சென்னை அடையாரில் இயங்கிவரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் அந்நிறுவன தலைவர் அவர்களால் அங்கேயே வேலைக்கு அமர்த்தப்பட்டு சுமார் ஓர் ஆண்டு காலம் ஊதியத்தில் சேவை செய்தவர்.

அச்சேவையின் இறுதிக் கட்டத்தில், அத்துறைத் தலைவரால் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டேன். அத்துறைத் தலைவர்தான், இவருடைய மனன ஆற்றலைப் பற்றி சிறப்பித்து கூறினார்கள். ஆனால் அத்தலைவர் அவருடைய ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதனை மாமல்லபுரம் சிற்பக்கலைக் கல்லூரி முதலில் கண்டறிந்து அதனால் பயனடைந்து, அரசுக்கும் எடுத்து சொல்லி, அரசின் ஆதரவுபெற முடிந்தது. இதனை ஏன் சொல்கிறேன் என்றால் எனக்கும் புலவர் அவர்களுக்கும் *15 ஆண்டுக்காலம் தொடர்பிருந்ததாகத் தங்கள் கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். ஓர் ஆண்டே அவருடைய தொடர்பு எனக்குண்டு என்பதை தெரிவித்திடச் செய்ய வேண்டுகிறேன்*. இக்குறிப்பு ஏதாவதொரு தவறான எண்ணத்தை வாசகரிடையே தோற்றுவித்திடக்கூடாது என்பதற்காக இங்கே வலியுறுத்திக் கூறிட வேண்டியுள்ளது.

/உண்மை நகல்/

* 15 திங்கள் என்பது ஆண்டு எனப் பெயர்த்து எழுதுங்கால் நேர்ந்த பிழைக்கு வருந்துகிறோம்.

பதிப்பாசிரியர்.

அன்புடன்,

(ஓம்)

24—11—86

(வை. கணபதி ஸ்தபதி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை

பேராசிரியர் ச. பாலசுந்தரம்,

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இது குறுமைக்கு எல்லையாக வந்த இரண்டடி வெண்பா.

நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர் - கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினம் சேரக் கெடும். (நாலடி - 18-9)

இது நாலடியான் வந்த அளவியல் வெண்பா. ஒன்றைச் சார்த்தியே நெடுமை குறுமை கொள்ளுதல் இலக்கணமாதலின் நாலடியை அளவாகக் கொண்டு மிக்கதனை நெடுவெண் பாட்டென்றும் குறைந்ததனைக் குறுவெண்பாட்டு என்றும் கொள்ளப்பட்டவாறறிக, இதனான் மூன்றடியான் வருவதும் குறுவெண்பாட்டென்பது கூறாமலே விளங்கும்.

சூ. 159 : அங்கதப் பாட்டளவு அவற்றோ டொக்கும்.

கருத்து : அங்கதமென்னும் பொருள்நிலை வகையல்லாத அங்கத மாகிய வசைப்பாட்டிற்குச் சிறுமை பெருமை கூறுகின்றது.

உரை : மேல் செம்பொருளும் பழிகரப்புமாக வெண்பாயாப் பிற்றாய் வருமெனப்பட்ட அங்கதப்பாட்டிற்கு அடியளவு மேலே வெண்பாவிற்குக் கூறிய சிறுமை பெருமையாகிய அளவொடு ஒக்கும்.

அஃதாவது இரண்டடிச் சிறுமையும் ஏழடிப் பெருமையுமாக வரும் என்றவாறு. 'ஒடு' என்பது ஓசை கருதி ஓடு என நீண்டது.

(எ - டு) சான்றோரிலக்கியம் இக்காலத்தரிதாயினமையின் வந்துழிக் காண்க.

சூ. 160 : கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை என்றிவை
தொகைநிலை அளவின் அடியில என்ப,

கருத்து : பேரல்லை வரையறையில்லாத பாட்டுக்கள் இவை என்கின்றது.

உரை : வெண்பா இயலான் வருமெனப்பெற்ற கலிவெண் பாட்டு, கைக்கிளைச் செய்யுள் செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து என்று கூறப்படுபவை அடியளவான் தொகைப் படுத்துக் கூறும் அடிவரையறை இல்லாதன எனக் கூறுவர் புலவர். செவியறிவுறூஉ என்பது குறைந்து நின்றது.

கிளை எதுகை கருதிச் செவியறிவுறூஉ முற்கூறப்பட்டது பெருமைக்கு வரையறையிலவென்றதனான் சிற்றெல்லை வரையறைப்படும் என உய்த்துணர வைத்தார். அஃதாவது கலிவெண்பாவிற்குப் பத்தும் ஏனையவற்றிற்கு நான்கும் எனச் சான்றோர் வழக்குநோக்கிக் கொள்க என்றவாறு.

(எ - டு) அவற்றவற்றிலக்கணங் கூறிய வழிக்காண்க.

இனி யாப்பருங்கல விருத்திரையுள் இச்சூத்திரத்தை மேற் கோளாகக் காட்டியவிடத்து அதன்பின்

''முடிபொருளல்லா தடியள பிலவே'' என்றொரு சூத்திரத்தைக் காட்டி'' என்றார் தொல்காப்பியனார்'' எனக் காணப்படுகின்றது. அச்சூத்திரம் இன்றைக்குள்ள தொல்காப்பியத்துள் காணப்பட வில்லை. அச்சூத்திரம் அடியளவு இல என்பதற்கு அமைதி கூறுவது போல அமைந்துள்ளது.

சூ. 161: புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றும் திண்ணிதின் தெரியின்
வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
பண்புற முடியும் பாவின என்ப.

கருத்து :- மேற்சூத்திரத்துப் புறநிலைவாழ்த்து முதலிய மூன்றும் அதிகரித்தமையின் அவற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது. இது அளவியல் பற்றியதன் றாயினும் அடிகளைப் பற்றிய மரபாதலின் உடன் கூறப்பட்டது.

உரை : புறநிலை வாழ்த்து வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ எனப் பொருட்டிறத்தால் மூவகையாக நிலைபெற்ற வாழ்த்தியல்

வகைப் பாக்கள் மூன்றும் ஊன்றி ஆராயுமிடத்து அவை வெண்பா இலக்கணத்தாலும் ஆசிரிய இலக்கணத்தாலும் பண்புறமுடியும் பாக்கள் என்று கூறுவர் புலவர்.

முன்னர் வாழ்த்தியல் வகையே (சூ-110) என்றவழி இவை "கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா' என்றதல்லது இன்ன பாவிற்குரியவை என்று விதந்து கூறாமையின் வெண்பாவானும் ஆசிரியத்தானும் வருமென ஈண்டும் கூறினார். 'பண்பு' என்றதனான் வெண்பாவாயும் ஆசிரியமாயும் தனித்து முடிதலே யன்றி இரண்டும் கலந்த மருட்பாவானும் வரும் எனக் கொள்க.

மருட்பாவாகவே வருமென இச்சூத்திரத்திற்குப்பொருள் கூறின் அது குன்றக் கூறலாம் என்க. திண்ணிதின் தெரியின் என்றதும் இக்கருத்தே பற்றியென உணர்க.

இவ்வாற்றான் மருட்பா நான்கு பொருள் பற்றிவரும் என்பதும் பெறப்பட்டது.

(எ-டு) திங்கள் இளங்கதிர்போற் றென்திங்களூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து - திங்கட்
கலைபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ.

(புறநிலை வாழ்த்து - வெண்பா)

இமையா முக்கண் இலங்குசுடர் வாய்ந்த
உமையொரு பாகத் தொருவன் காப்பநின்
பல்கிளைச் சுற்றமொடு நல்லிதின் நந்தி
நீபல வாழிய வாய்வாட் சென்னிநின்
ஒருகுடை வரைப்பின் நீழல் பெற்றுக்
கிடந்த எழுகடல் நாப்பண்
அகலிரு விசும்பின் மீனினும் பலவே.

(புறநிலை வாழ்த்து - ஆசிரியப்பா)

இவை இரண்டும் பேராசிரியர் காட்டியவை.

கண்ணுதலோன் காப்பக் கடன்மேனி மால்காப்ப
எண்ணிருதோள் ஏந்திழையாள் தான்காப்பப்-பண்ணிய
சென்னியர்க் களிக்கும் தெய்வநீ
மன்னுக நாளுமிம் மண்மிசை யானே. புற-வா, மருட்பா:

இது பெரும் பொருள் விளக்கம் கடவுள் வாழ்த்து. ஏனையவும் இவ்வாறே வரும். சான்றோர் இலக்கியங்களுட் காண்க.

சூ. 162: பரிபா டல்லே
நாலீ ரைம்பஃதுயர்படி யாக
ஐயைந் தாகும் இழிபடிக் கெல்லை.

கருத்து: பரிபாடலின் அடியளவிற்கு வரையறை கூறுகின்றது.

உரை: பரிபாடல் இருநூறடிப் பேரெல்லையாகவும் இருபத்தைந்தடிச் சீற்றெல்லையாகவும் வரும்.

(எ-டு) மணிவரை யூர்ந்த (பரிபாடல்-) என்னும் பாடல் முப்பத்திரண்டு அடிகளால் வந்தது. விரிகதிர்மதியமொடு (பரிபாடல்-) என்னும் பாடல் நூற்றுநாற்பதடிகளான் வந்தது. 25 அடிச் சிற்றெல்லையும் 200 அடிப் பேரெல்லையும் வந்துழிக் காண்க.

சூ. 163: அளவியல் வகையே அனைவகைப்படுமே

கருத்து: பின்னது நிறுத்தல் என்னும் உத்திவகையான் அளவியல் வகை இவ்வளவே என முடித்துக் கூறுகின்றது.

உரை: செய்யுளுறுப்பினுள் ஒன்றாகிய அளவினது இயல்பு மேற்கூறிய அத்துணைப் பகுதிப்படும்.

கலிவகைக்குரிய அளவினை விதந்து கூறிற்றிலராயினும் கலியுறுப்புக்களுக்கு ஓதிய அளவையான் அவற்றை உய்துணர்ந்து கொள்ளுதல் இந்நூற்பாவின் பயனெனை அறிக.

சூ. 164: எழுநிலத் தெழுந்த செய்யுள் தெரியின்
அடிவரை யில்லன ஆறென மொழிப.

கருத்து: அளவியல் அதிகாரப்பட்டமையான் அதனைத் தொடர்ந்து அளவிற் படாதவை இவை எனக் கூறுகின்றது.

உரை: பாட்டு முதலாகிய எழுவகைச் செய்யுள் இலக்கியத்துத் தோன்றி வழங்கும் செய்யுட்களை ஆராயின் அவற்றுள் அடி வரையறை இல்லாதன ஆறு வகையன எனக் கூறுவர் புலவர்.

நிலம் என்றது இலக்கியத்தை.

சூ. 165: அவைதாம்
நூலி னான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறை மொழி கிளந்த மந்திரத்தான
கூற்றிடைவைத்த குறிப்பினான.

கருத்து: 'அடிவரையில்லன' என்றவற்றின் பெயரும் முறையும் கூறுகின்றது.

உரை: அடிவரையறைப் படாதவை எனப்பட்டவைதாம் நூலின்கண் ஆகிவருவனவும், உரையின்கண்ணாகி வருவனவும் விடுகதையொடு புணர்ந்தபிசியின்கண்ணாகி வருவனவும், காரணங் கருதி வரும் முதுமொழியின்கண்ணாகி வருவனவும் மறைத்த மொழி களாற் கிளக்கப்பட்ட மந்திரத்தின்கண்ணாகி வருவனவும், மேற் கோளினை இடை வைத்துக் கூறும் குறிப்பின்கண்ணாகி வருவன வும் ஆகும்.

'பாட்டுரை நூலே' (சூ-75.) என்னும் சூத்திரத்து வாய்மொழி என்றும் அங்கதமென்றும் கூறப்பட்டவையே ஈண்டு முறையே மந்திரமென்றும் கூற்றிடை வைத்த குறிப்பென்றும் கிளக்கப் பெற்றன.

ஆண்டுக் கூறியவாறே கூறாமல் பெயர் வேறுபடுத்தக் கூறியது என்னையெனின்? வாய்மொழியை மந்திரமாகக் கூறாமல் வாயுறையாகக் கூறினும் அங்கதத்தைக் குறிப்பு மொழியாற் கூறாமல் செம்பொருளாகவும் மொழிகரப்பாகவும் கூறினும் ஆங்கவை அடிவரையறையுற்ற பாட்டாக நிகழும். அவை அடி வரையறையின்றி மறைமொழி கிளந்தும் கூற்றிடை வைத்தும் வரின் இப்பெயர்களான் வழங்கப்பெறும் என்றறிவித்தற் கென்க.

சூ. 166: அவற்றுள்
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகை யினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு புணர்ந்து
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

கருத்து : மேல்நிறுத்த முறையான் அடிவரையறைப்படாத நூலினது இலக்கணம் ஆமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய ஆறனுள் நூலெனச் சிறப்பித்துக் கூறப் படுவதைக் கருதுமிடத்துத் தொடக்கமும் முடிவும் முரணுதலின்றித் தொகையாகவும் வகையாகவும் பொருண்மை புலப்படக் காட்டி ஆழ்ந்தமைந்து அகன்ற உரையொடு பொருந்தி மிக நுட்பமாகப் பொருளை விளக்குதல் அதனுடைய தன்மையாகும்.

ஈண்டுக் கூறிய இயல்புகள் சிறிதும் குறைபாதமைதல் வேண்டுமென்பார் 'அது' அதன் பண்பெனச் சுட்டிக்கூறினார் என உணர்க. பண்பு என்றது இலக்கணத்தை.

நூலையாக்கும் மரபு முறைமை பற்றி மரபியலுள் விளங்க ஓதப்படுதலின் நூலினது பண்பே ஈண்டுக் கூறப்பட்டதென அறிக.

சூ. 167 : அதுவே தானும் ஒரு நால் வகைத்தே

கருத்து : நூலது பாகுபாடு கூறுகின்றது.

உரை ; மேற்கூறிய நூல் நான்கு வகையினதாகும். வகை என்றது பகுப்பினை.

சூ. 168 ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த ஓத்தினானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்று
ஆங்கனை மரபின் இயலு மென்ப.

கருத்து : நூல்வகை நான்கு என்றதை விளக்குகின்றது.

உரை : யாதானும் ஒரு பொருளைக் கூறக் கருதிய சூத்திரங் களால் வருவதும் ஓரினமாகிய பொருளை வருத்துணர்த்தக் கிளந்த ஒத்துக்களான் வருவதும் இனமாய பல பொருளை விரித்துணர்த்தக் கிளந்த படலங்களான் வருவதும் அம்மூன்று உறுப்புக்களையும் அடக்கி நிறைந்து பிண்டமாக வருவதும் என அத்தன்மைத்தாகிய மரபினாலே வகைப்பட்டு நூல் நடைபெறும் என்று கூறுவர் புலவர்.

இவை ஒன்றற்கு ஒன்று சினையும் முதலுமாக நின்று தனித்தனியாயும் கூடியும் வருதலின் வகைப்படுத்தப்பட்டதென அறிவித்தற்கு 'ஆங்கனை' மரபின் இயலும் என்றார் ஆசிரியர்.

யாதானும் ஒரு பொருளைப்பற்றிச் சில சூத்திரங்களான் அமைந்த நூல் சூத்திரமென்று வழங்கப்பெறும். வடமொழியில் மகேசுரச் சூத்திரம், பிரமசூத்திரம் என்னும் நூல்களைப் போலத் தமிழின்கண் அக்காலத்திருந்தன போலும், இக்காலத்து அரியவாயின.

இனமொழி என்றது இனமாயப் பொருளை. அது சூத்திரமும் அவற்றானாய இயலுமாக வரும். அது தாள வகையோத்து, என்றாற்போல்வது. படலமாவது அதிகாரம் அது சில ஒத்துக்களான் அமைந்து பன்னிருபடலம், என்றாற்போல வருவது. பிண்டம் - தொகுதி, அஃதாவது முழுமையானது. தொல்காப்பியம், வீரசோழியம் போல்வனவாய் வருவது. பிண்டங்களால் நிறைந்தது பிண்டி, என ஒருவகையை மிகுத்துக் கூறுவார் பேராசிரியர். இயற்றமிழ் ஒன்றான் மட்டும் நிறைந்த தொல்காப்பியம் போல்வனவறைப் பிண்டம் என்றால் இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் மூன்றும் நிறைந்ததற்கு ஒரு பெயர் வேண்டுமென்று கருதி அவ்வாறு கூறினார். அகத்தியம் பிண்டி என்பது அவர் கருத்து. முத்தமிழையும் பற்றிய முழு நூலாயின் இயற்றமிழ் முதலியவை படலம் என்று பெயர் பெறுவதல்லது பிண்டம் எனப் படாதாகலின் அது பொருந்துமாறில்லை என்க.

சூ. 169 : அவற்றுள்
சூத்திரந்தானே
ஆடி நிழலின் அறியத் தோன்றி
நாடுதலின்றிப் பொருள் நனி விளங்க
யாப்பினுட்டோன்ற யாத்தமைப் பதுவே.

கருத்து : முறையே நூல் வகையுள் சூத்திர நூலின் பொது இலக்கணமாமாறு கூறுகின்றது.

உரை ; மேற்கூறிய வகை நான்கனுள் சூத்திரமாவது ஆடியின்கண் பரந்த பொருள்கள் குவிந்து நுணுகித் தோன்றும் நிழல்போலக் கூறப்படும் பொருளின் பரப்பெல்லாம் அறியும்வண்ணம் தோன்றி, இதுவோ அதுவோ என ஐயுற்று ஆராய்தல் வேண்டுதலின்றிப் பொருளின் கூறுகள் யாவும் நனிவிளங்க ஆசிரிய முதலாய யாப்பினுள் யாதாயினும் ஒன்றன் யாப்புமுறை தோன்ற யாக்கப்பட்டதாகும்.

பாட்டிற்குரிய ஓசையும் அடி வரையறையும் வேண்டாது தூக்கு அமைந்து நிற்பதொன்றே சாலும் என்பார். "யாப்பினுட் டோன்ற யாத்து" என்றும் "அமைப்பது" என்றும் கூறினார் என அறிக.

எனினும் "பாஅ வண்ணம் நூற்பாற் பயிலும்" என்பதனால் அசையும் சீரும் இசையொடு சேர்த்தமைத்தலே சிறப்புடைத்து என்பதும் போதரும். தனிச் சூத்திரத்தின் இயல்பு மரபியலிற் கூறுவார் ஆண்டுக் காண்க.

சூ. 170 : நேரினமணியை நிரல்பட வைத்தாங்கு
ஓரினப் பொருளை ஒருவழி வைப்பது
ஒத்தென மொழிப உயர்மொழிப்புலவர்

கருத்து : ஒத்தென்னும் வகைக்கு இலக்கணங் கூறுகின்றது.

உரை : ஓரினமாகிய மணிகளுள் தரத்தால் ஒத்த மணிகளை வரிசை பெறக் கோத்தமைப்பது போல ஒன்றற்கொன்று இயையுடையவாகி வரும் பொருளை ஒருங்குநிரல் பட வைத்துச் செய்யும் நூல் வகையைன ஓத்தெனக் கூறுவர் சிறந்த புலவர்.

எழுத்திலக்கணமேயாயினும் தனிப்பக்காண்பதும் மொழியிடை நிற்பதுமாகிய வேறுபாடு கருதி நூன்மரபு மொழிமரபு எனவைத்தாற் போல நிரல்பட வைத்துச் செய்யப்பெறுவது ஓத்து என்னும் நூல் வகையாகும்.

சூ. 171 : ஒரு நெறியின்றி விரவிய பொருளான்
பொதுமொழி தொடரின் அதுபடலமாகும்.

கருத்து : படலமென்னும் நூல் வகைக்கு இலக்கணங் கூறுகின்றது

உரை : ஒரு பொருளே என்னும் முறைமையின்றி வேறுபட்டு விரவிய பொருளாற் பொதுப்பொருள் தோன்ற ஒத்துக்களை நிரல் படுத்துத் தொடர வைத்துச் செய்யப்படுவது படலமென்னும் நூல் வகையாம்.

(எ-டு) : கிளவியாக்கம் முதலாக ஒன்பது ஓத்துக்கள் நால்வகைச் சொற்களின் இலக்கணமாக வேறுபட்டு நின்றவாறும் யாவும் சொல்லிலக்கணமே கூறுதலின் சொற்படலம் என ஒரு பெயர்பெற்றவாறும் காண்க. புறத்திணைகளே யன்றி அகப்புறத்திணைகளாகக் கைக்கிளையையும் பெருந்திணையையும் கொண்டு பன்னிருபடலம் அமைந்தவாறும் காண்க.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,

தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர் க. வெள்ளைவாரணன்,

142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,

இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,

தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட், பிஎச்.டி.

தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ..

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2,

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்,

துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2.

புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,

தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரா மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2

திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,

துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

Regd. No. TN/TB/24.

நூல் - அஞ்சல்

திருமிகு

7. ஆசிரியர்,
தஞ்சை சரபோசி மன்னர் சரஸ்வதி
மகால் நூல், நிலைய இதழ்,
அரண்மனை,
தஞ்சாவூர்.

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி,
தஞ்சாவூர் - 613 009.